# **கோயம்புத்தூர் மாநகராட்சி**

**அனுப்புநர்**

**திரு செ.ம.வேலுசாமி**
**வணக்கத்திற்குரிய மேயர்**,
கோயம்புத்தூர் மாநகராட்சி,

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர் , கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 7341/ 2012 / எம்சி. 8 நாள் : 27.06.2012**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்ற அவசரக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற 29.06.2012 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி

/உண்மை நகல் /

**மாமன்ற செயலாளர்**

**இணைப்பு : 1**

**நகல் :**

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம் - ஜூன் 2012

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| | அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள்** |
| **1** | பொறியியல் பிரிவு - உக்கடம் மீன் சந்தையினை நவீன முறையில் கட்டுதல் பணி – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **2** | பொறியியல் பிரிவு - வார்டு எண் 73 மற்றும் 79 – தார் தளம் அமைத்தல் பணிகள் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **3** | பொறியியல் பிரிவு - வார்டு எண் 9- செட்டியார் அம்மா காடு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **4** | பொறியியல் பிரிவு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 60 – எஸ்.எம்.எஸ். லேஅவுட்டில் பள்ளிக் கட்டிடம் கட்டுதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **5** | பொறியியல் பிரிவு - வார்டு எண் 32- விளாங்குறிச்சியில் கழிப்பிடம் கட்டுதல் பணி - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **6** | பொது கணக்குப் பிரிவு - ஓய்வூதியதாரர் Dr. A.V. இராமமூர்த்தி அவர்களுக்கு திருத்திய ஊதிய ஏற்ற முறைகளின்படி ஓய்வூதியம் மிகையாக வழங்கப்பட்டது – தள்ளுபடி செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **7** | பொது கணக்குப் பிரிவு - ஓய்வூதியதாரர்களுக்கு திருத்திய ஊதிய ஏற்ற முறைகளின்படி ஓய்வூதியம் மிகையாக வழங்கப்பட்டது – தள்ளுபடி செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **8** | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - திருவள்ளுவர் நகர், குளத்துப்பாளையம் கழிப்பிடங்கள் - பராமரிப்பு பணி முடியும் வரை ஏல இனத்தில் இருந்து நீக்கம் செய்தல்- மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| **9** | கல்வி பிரிவு - மாநகராட்சி பள்ளிகளில் 12-ம் வகுப்பில் பயிலும் அதிக மதிப்பெண் பெறும் முதல் 3 மாணவ மாணவியர்களுக்கு உயர் கல்விக்கான கட்டணத்தை மாநகராட்சி செலுத்துதல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **10** | பொறியியல் பிரிவு - ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி புனரமைப்புத் திட்டம் - சிப்பம் 1 – 33 சாலைப் பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **11** | பொறியியல் பிரிவு - ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி புனரமைப்புத் திட்டம் - சிப்பம் 2 – 28 சாலைப் பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **12** | பொறியியல் பிரிவு - ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி புனரமைப்புத் திட்டம் - சிப்பம் 3 – 7 சாலைப் பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **13** | பொறியியல் பிரிவு - ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி புனரமைப்புத் திட்டம் - சிப்பம் 4 –13 சாலைப் பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **14** | பொறியியல் பிரிவு - ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி புனரமைப்புத் திட்டம் - சிப்பம் 6 –3 சாலைப் பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **15** | பொறியியல் பிரிவு - ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி புனரமைப்புத் திட்டம் - சிப்பம் 7 –3 சாலைப் பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **16** | பொறியியல் பிரிவு - ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி புனரமைப்புத் திட்டம் - சிப்பம் 8 – 4 சாலைப் பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **17** | பொறியியல் பிரிவு - ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி புனரமைப்புத் திட்டம் - சிப்பம் 9 –3 சாலைப் பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| **18** | பொறியியல் பிரிவு - ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி புனரமைப்புத் திட்டம் - சிப்பம் 10 –3 சாலைப் பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |

| | |
|---|---|
| **19** | பொறியியல் பிரிவு - ஒருங்கிணைந்த நகா்ப்புர வளா்ச்சி புனரமைப்புத் திட்டம் - சிப்பம் 11 – 3 சாலைப் பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடா்பாக |
| **20** | பொறியியல் பிரிவு - ஒருங்கிணைந்த நகா்ப்புர வளா்ச்சி புனரமைப்புத் திட்டம் - சிப்பம் 12 –3 சாலைப் பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடா்பாக |
| **21** | பொறியியல் பிரிவு - ஒருங்கிணைந்த நகா்ப்புர வளா்ச்சி புனரமைப்புத் திட்டம் - சிப்பம் 13 – 3 சாலைப் பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடா்பாக |
| **22** | பொறியியல் பிரிவு - ஒருங்கிணைந்த நகா்ப்புர வளா்ச்சி புனரமைப்புத் திட்டம் - சிப்பம் 14 –3 சாலைப் பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடா்பாக |
| **23** | பொறியியல் பிரிவு - ஒருங்கிணைந்த நகா்ப்புர வளா்ச்சி புனரமைப்புத் திட்டம் - சிப்பம் 15 – 4 சாலைப் பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடா்பாக |
| **24** | பொறியியல் பிரிவு - ஒருங்கிணைந்த நகா்ப்புர வளா்ச்சி புனரமைப்புத் திட்டம் - சிப்பம் 5 –12 சாலைப் பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடா்பாக |
| **25** | பணியமைப்பு - இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்து வரும் தொகுப்பூதிய பணியாளா்களை பணி நிரந்தரம் செய்தல் - அரசுக்கு செயற்குறிப்பு அனுப்புதல் - மாமன்றம் பரிசீலனை செய்தல் - தொடா்பாக |
| **26** | பணியமைப்பு - மாநகராட்சியில் 6 மாதங்களுக்கு மேல் காலியாக உள்ள பணியிடங்களை பூா்த்தி செய்தல் - அரசின் அனுமதி கோருதல் - மாமன்றம் பரிசீலனை செய்தல் - தொடா்பாக |
| **27** | பொறியியல் பிரிவு - மாநகராட்சி நகா் நல மையங்களில் காவலா்கள், துப்புரவு பணியாளா்கள், குழாய் பொருத்துனா், மின் கம்பியாளா் மற்றும் மேற்பாா்வையாளா்கள் போன்ற பணியாளா்களை கொண்டு ஒரு வருட காலத்திற்கு தூய்மை பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் காவலா்களை நியமித்தல் - ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடா்பாக |
| **28** | பொறியியல் பிரிவு - தெற்கு மற்றும் மத்திய மண்டலம் - மாநகராட்சி ஆரம்பப்பள்ளிகள், உயா்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் காவலாளிகள்,துப்புரவு பணியாளா்கள், குழாய் பொருத்துனா்கள், மின்கம்பியாளா் மற்றும் மேற்பாா்வையாளா்கள் போன்ற பணியாளா்களை கொண்டு ஒரு வருட காலத்திற்கு தூய்மைப் பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் காவலா்களை நியமித்தல் - ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடா்பாக |
| **29** | பொறியியல் பிரிவு - ஒருங்கிணைந்த நகா்ப்புர மேம்பாட்டுத் திட்டம் - திடக்கழிவு மேலாண்மை - சிப்பம் 3 – குப்பை சேகரிப்பு பணிகளுக்கு தேவையான 750 எண்ணிக்கையிலான 660 லிட்டா் கொள்ளளவு கொண்ட G.I. Sheet கொள்கலன்களை கொள்முதல் செய்தல் - ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக. |
| **30** | பொறியியல் பிரிவு - ஒருங்கிணைந்த நகா்புர மேம்பாட்டுத் திட்டம் - திடக்கழிவு மேலாண்மை - சிப்பம் 4 – எக்ஸ்கவேட்டா் லோடா் மண் அள்ளும் இயந்திரம் கொள்முதல் செய்தல் - ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக. |
| **31** | பொறியியல் பிரிவு தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையத்தில் உள்ள புதிய தங்கும் விடுதிக்கு கூடுதல் மேம்பட்ட வசதிகள் செய்தல் – மாமன்ற அனுமதி கோருதல் – தொடா்பாக. |
| **32** | பொறியியல் பிரிவு –குறிச்சி, குனியமுத்தூா், கிணத்துக்கடவு குடிநீா் திட்டத்தின்கீழ் குடிநீா் விநியோகம் செய்வதற்கு புதிய டீசல் ஜெனரேட்டா் வாங்குதல் – மாமன்றத்தின் அனுமதி கோருதல் - தொடா்பாக. |
| **33** | பொறியியல் பிரிவு –கட்டிட கட்டுமானம் மற்றும் மராமத்து பணிகள் செய்தல் - சாலைப் பணிகள் செய்தல் - பொதுப் பணி துறை மற்றும் நெடுஞ்சாலை துறையின் மூலம் தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணை பெறப்பட்டது – நடைமுறைப்படுத்துதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக. |
| **34** | பொது சுகாதாரம் - கோவை வடக்கு வட்டத்தில் உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் - வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோா் பட்டியல் எண் வழங்குவது – மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக. |
| **35** | நகரமைப்பு பிரிவு - கலை பண்பாட்டுத்துறை – கோயம்புத்தூா் தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரிக்கு சொந்தமாக கட்டிடம் கட்ட முன்நுழைவு அனுமதி வழங்குதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக. |
| **36** | பொறியியல் பிரிவு - பாதாள சாக்கடை பணிகள் முடிவடைந்த சாலைகளில் சீரமைப்பு பணி மற்றும் தாா்தளம் அமைத்தல் - அரசு மானியம் பெற பிரேரணை அனுப்புதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடா்பாக. |

**நன்றியுரை**

**அ)** **திருக்குறள்**

வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று.

**(குறள் - 11)**

**விளக்கம்**

மழைநீரால் பயன்பெற்று உலகம் செழித்து வாழ்வதால் அந்நீர் உயிர்காக்கும் அருமருந்து என உணரவேண்டும்.

**திருவள்ளுவர்.**

---

**ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**<u>சிறப்புத் தீர்மானம் : 1  நாள் 29.06.2012</u>**

ICELI சார்பில் பிரேசில் நாட்டில் பிலோ ஹரிசான்டு நகரிலும் ரியோ டி ஜெனீரோ-ல் நடைபெற்ற சுற்றுச்சூழல் மாநாட்டிலும் கோயம்புத்தூர் மாநகராட்சியின் சார்பாக கலந்து கொள்ள அனுமதி வழங்கியும், அந்த மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் திட்டங்களான மழைநீர் சேகரிப்பு திட்டம், தமிழக ஆறுகளின் உபரிநீர் கடலில் வீணாக கலப்பதை தடுக்க ரூ. 1500 கோடியில் தமிழக நதிகளை இணைக்கும் திட்டம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் 64-வது பிறந்த தினத்தை முன்னிட்டு தமிழகம் முழுவதும் 64 இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டம், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாடும் ஏழை எளிய மக்களுக்கு சூரிய ஒளி மின்சார வசதியுடன் கூடிய விலையில்லா பசுமை வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம், வெப்பத்தையும் மின்சார பயனீட்டையும் குறைக்கும் விதமாக தற்போதுள்ள மின்சார பல்புகளுக்கு பதிலாக தமிழகத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் மின் பயனீட்டைக் குறைத்து கூடுதல் ஒளிதரக்கூடிய LED மற்றும் CFL பல்புகள் பயன்படுத்தும் திட்டம், கார்பன் டை ஆக்சைடு வெளியேற்றத்தை குறைக்கும் வகையில் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டி (சைக்கிள்) வழங்கும் திட்டம் போன்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் திட்டங்கள் பற்றி எடுத்துரைக்கும் வாய்ப்பையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள்.

இந்த இரண்டு மாநாட்டிலும் கலந்து கொண்ட பிரதிநிதிகளுக்கு கோயம்புத்தூர் மாநகராட்சியின் சார்பாக வழங்கப்பட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் நலத் திட்டங்களையும், சாதனைகளையும் விளக்கும் கையேட்டினை படித்த மற்ற நாடுகளின் பிரதிநிதிகள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் தீர்க்க தரிசனத்தை பாராட்டி இத்திட்டங்கள் தங்கள் நாடுகளுக்கு ஒரு முன்மாதிரியாக செயல்படும் என்று கூறியுள்ளார்கள்.

மிகவும் முக்கியம் வாய்ந்த இந்த மாநாட்டில் கலந்துகொள்ள வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு கோயம்புத்தூர் மாநகர மக்களின் சார்பாகவும், மாமன்ற உறுப்பினர்களின் சார்பாகவும் இம்மாமன்றம் நன்றிகளை உரித்தாக்கி கொள்கிறது என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் முன்மொழியப்பட்டு, வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவர் திரு ஆர். பிரபாகரன் அவர்களால் வழிமொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**<u>சிறப்புத் தீர்மானம் : 2 நாள் 29.06.2012</u>**

தமிழகத்தில் இருக்கின்ற காவிரி, பாலாறு, முல்லை பெரியாறு ஆகிய அனைத்து திட்டங்களையும் பாதுகாத்து, தமிழகத்தின் உரிமைகளை காத்து வருகின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள், கோயம்புத்தூர் மாவட்டத்தின் ஜீவ நீராதாரமாகவும், கோயம்புத்தூர் மாநகராட்சி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களின் நீராதாரமாகவும் விளங்கும் பில்லூர் குடிநீர் திட்டத்தை தடுக்கும் வகையில், அட்டப்பாடி என்ற இடத்தில் சிறுவாணி ஆற்றின் குறுக்கே 4.5 டி.எம்.சி கொள்ளளவு கொண்ட அணையைக் கட்ட திட்டமிட்டுள்ள கேரள அரசின் முயற்சியை தடுத்து நிறுத்த, இந்திய பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களுக்கு கடிதம் எழுதி நடவடிக்கை எடுத்து, தாயுள்ளத்தோடு தமிழகத்தில் உரிமைகளை காத்து வருகின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு இம்மாமன்றம் நன்றியை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறது என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் முன்மொழியப்பட்டு கிழக்கு மண்டல தலைவர் திரு கே.ஆர். ஜெயராம் அவர்களால் வழிமொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**<u>சிறப்புத் தீர்மானம் : 3 நாள் 29.06.2012</u>**

கோயம்புத்தூர் மாநகராட்சி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களின் முக்கிய நீராதானமான சிறுவாணி நீரை தடுக்கும் வகையில், கோவை, ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களின் விவசாயம் பாதிக்கப்படும் அளவிலும், சிறுவாணி ஆற்றின் குறுக்கே அணை கட்டும் கேரள அரசின் முயற்சிக்கு இம்மாமன்றம் எதிர்ப்பை தெரிவிக்கின்றது.

இந்த விசயத்தில் மத்திய அரசு உடனடியாக தலையிட்டு, மக்களின் குடிநீர் பிரச்சனையை தீர்க்கவேண்டும் என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் முன்மொழியப்பட்டு கிழக்கு மண்டல தலைவர் திரு கே.ஆர். ஜெயராம் அவர்களால் வழிமொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**<u>சிறப்புத் தீர்மானம் : 4 நாள் 29.06.2012</u>**

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடைப் பணி முடிவடைந்த பகுதிகளில் சாலை சீரமைப்புப் பணிகள் மற்றும் தார் சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ள ஏற்கனவே வழங்கிய ரூ. 52.00 கோடி அல்லாமல் மேலும் ரூ. 15.00 கோடி நிதியை கோயம்புத்தூர் மாநகராட்சியின் வளர்ச்சிப் பணிகளுக்காக வழங்கி ஆணை பிறப்பித்துள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இம்மாமன்றம் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## பொருள் எண் 1

கோவை மாநகராட்சி உக்கடம் பகுதியில் தேசிய மீன் வளர்ச்சி வாரியத்தின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 13-06-2012 அன்று பரிசீலனை செய்து பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 6346/11/ எம்.டி.4 | உக்கடம் மீன் சந்தையினை நவீன முறையில் கட்டுதல | 324.11 | 06-06-2011 மறு அழைப்பு | (i) தி./ள். எஸ். பி. பில்டர்ஸ், சென்னை<br>(ii) தி./ள். ஏ.பி.ஆர் கன்ஸ்டரக்சன், கோயம்புத்தூர் | தி./ள். எஸ். பி. பில்டர்ஸ், சென்னை (விலை குறைப்பிற்கு பின்பு 4.89 % மதிப்பீட்டை விட அதிகம்) |

மேற்படி பணியின் அவசர அவசியத்ததைக் கருதியும், அரசு துறையின் சார்பில் செய்யப்படும் Deposit work ஆக இருப்பதாலும், காலதாமதத்தால் ஏற்படும் நிதி இழப்பை தவிர்க்கவும் மாமன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி தி.ள் எஸ்.பி. பில்டர்ஸ், சென்னை அவர்கள் அளித்த மதிப்பீட்டிற்கு 4.89% அதிகம் ஆன ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு முன் அனுமதி வழங்கியதற்கு பின்னேற்பு வழங்க மாமன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதி வழங்கலாம். ந.க.எண். 6346 /11/ எம்.டி.- 4

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 110 நாள் : 29.06.2012**

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 2

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கீழ்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 07-06-2012 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்ச-த்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| | சட்டமன்ற உறுப்பினர் நிதி | | | | | |
| 1 | 2175/11/ எம்.டி.5 | வார்டு எண்.73 சுந்தரேசன் காலனியில் தார்தளம் புதுப்பித்தல் | 15.00 | 16-05-2012 ஆறாவது அழைப்பு | 1. திரு.அ.அம்மாசையப்பன் கோயம்புத்தூர் 4.78% அதிகம்<br>2.திருமதி.மீனாட்சி கோயம்புத்தூர் 8.52% அதிகம் | 1.திரு.அ. அம்மாசையப்பன் கோயம்புத்தூர் 4.78% அதிகம் |
| 2 | 1136/12 எம்.டி.5 | வார்டு எண்.79 பொன்னையராஜபுரம் பிரதான சாலைக்கு தார்தளம் அமைத்தல் | 14.91 | 16-05-2012 ஆறாவது அழைப்பு | 1.தி/ள் ஆர்.கிருஷ்ணசாமி கோயம்புத்தூர் 4.47% அதிகம்<br>2.தி/ள்.எஸ்.பி.பில்டர்ஸ் கோயம்புத்தூர் 5.00 %அதிகம் | 1.தி/ள் ஆர்.கிருஷ்ணசாமி கோயம்புத்தூர் 4.47% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- வரிசை எண். 1 முதல் 2 வரை உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 2175/2011/எம்.டி.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 111 நாள் : 29.06.2012</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 3

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்டுள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் தமிழக அரசின் சிறப்பு திட்டம் Integrated Urban Development Mission (IUDM) 2011-2012 திட்டத்தின்கீழ் சாலைப் பணிகள் மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ள பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் - தொடர்பு.

--------------

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது கடித எண்.47923/2011/இ3 நாள் 01-02-2012-ல் கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்டுள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் அடிப்படை கட்டமைப்பு போன்ற சிறப்பு வசதிகள் செய்ய தமிழக அரசின் சிறப்பு திட்டம் Integrated Urban Development Mission (IUDM) 2011-2012 திட்டத்தின்கீழ் மாநகராட்சிக்கு ரூ 2440 இலட்சம் ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.

இதனைத் தொடர்ந்து புதியதாக இணைக்கப்பட்டுள்ள நகராட்சிகள் பேரூராட்சிகள், சாலைப் பணிகள், மழைநீர் வடிகால் மற்றும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் போன்ற பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரித்து நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மாமன்றத் தீர்மானம் எண்.211 நாள் 29-12-2011-ல் மேற்காண் பணிகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்டுள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் சாலைப் பணிகள் மற்றும் மழைநீர் வடிகால் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 25-04-2012 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1790/12/ எம்.டி.2 | வார்டு எண்.9 செட்டியார் அம்மா காடு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல். | 11.50 | 16-05-2012 நான்காவது அழைப்பு | திரு.ஆர். கிருஷ்ணசாமி, கோயம்புத்தூர் 4.96% அதிகம் | திரு.ஆர். கிருஷ்ணசாமி, கோயம்புத்தூர் 4.96% அதிகம் |

மேற்கண்ட பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண் 1790/2012/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 112 நாள் : 29.06.2012</u>**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 4

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.60-ல் எஸ்.எம்.எஸ். லே அவுட்டில் பள்ளிக்கட்டிடம் கட்டுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.75,00,000,-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி மாமன்ற கூட்டத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் 5727/2011/எம்.டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 113 நாள் : 29.06.2012**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 5

கோவை மாநகராட்சி பகுதியில் கோரிக்கை எண் 34 -2011-2012-ம் ஆண்டு நகர்புர உள்ளாட்சி பகுதிகளில் திறந்த வெளியில் மனித கழிவு கழிக்கும் நிலை இல்லாத நடவடிக்கை எடுத்தல் குறித்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கீழ்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 07-06 -2012 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணியை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது. மேலும், இப்பணிக்கு உண்டாகும் செலவினத்தை மாநில உட்கட்டமைப்பு இடைநிரப்பு நிதி (2011-2012)-ன் மூலம் வழங்கப்படும் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| மாநில உட்கட்டமைப்பு இடை நிரப்பு நிதி | | | | | | |
| 1 | 1032/12/ எம்.டி.5 | வார்டு எண்.32 – விளாங்குறிச்சியில் புதியதாக கழிப்பிடம் கட்டுதல் | 9.90 | 14.05.2012 இரண்டாவது அழைப்பு | திரு.டி.விஜயகுமார் கோயம்புத்தூர் 4.93% அதிகம் | திரு.டி.விஜயகுமார் கோயம்புத்தூர் 4.93% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது

அலுவலகக்குறிப்பு :- வரிசை எண். 1-ல் உள்ள பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 1032/2012/எம்.டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 114 நாள் : 29.06.2012**

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 6

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது கணக்குப்பிரிவு – திருத்திய ஊதிய ஏற்ற முறைகளின்படி ஓய்வூதியதாரர் Dr.A.V.இராமமூர்த்தி அவர்களுக்கு மிகையாக ஓய்வூதியம் வழங்கப்பட்ட தொகை – தள்ளுபடி செய்வது - தொடர்பாக.

--------

அரசாணை எண்.235 நாள்.01.06.2009, தமிழ்நாடு திருத்திய ஓய்வூதிய ஏற்ற முறைகளின்படி ஓய்வூதியம் நிர்ணயம் செய்ததில் Dr.A.V.இராமமூர்த்தி (ஓய்வு பெற்ற மருத்துவ அலுவலர்) அவர்களுக்கு 01.01.2006 முதல் ரூ.6,259/– அடிப்படை ஓய்வூதியம் நிர்ணயம் செய்வதற்கு பதிலாக ரூ.9,388/–ம் மேற்படியார் 80 வயது கடந்து விட்ட படியால் 01.01.2011 முதல் 20% கூடுதல் ஓய்வூதியம் நிர்ணயம் செய்து ரூ.8,137/–க்கு பதிலாக ரூ.12,206/– வழங்கப்பட்டுள்ளது. அதனால் 01.01.2007 முதல் 31.12.2011 வரை ரூ.2,45,031/–ஐ கூடுதலாக ஓய்வூதியம் வழங்கப்பட்டதால் மாநகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. மேற்படித் தொகையை அவரது ஓய்வூதியத்தில் பிடித்தம் செய்ய நடவடிக்கை எடுக்க இருந்த நிலையில் Dr.A.V.இராமமூர்த்தி 15.01.2012–ம் தேதி காலமாகி விட்டார். எனவே, மேற்படித் தொகையை பிடித்தம் செய்ய இயலாத நிலை உள்ளது.

எனவே, மிகையாக வழங்கப்பட்ட தொகை ரூ.2,45,031/—ஐ தள்ளுபடி செய்ய அனுமதிக்கலாம் என கணக்குகள் குழு தீர்மான எண்.3 நாள்.15.06.2012—ல் தீர்மானிக்கப்பட்டுள்ளதை மாமன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.2563/2011/பி1

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 115 நாள் : 29.06.2012**

கணக்குகள் குழு தீர்மானம் எண் 3 நாள் 15.06.2012ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் 7**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது கணக்குப்பிரிவு – திருத்திய ஊதிய ஏற்ற முறைகளின்படி ஓய்வூதியதாரர்கள்/ குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு மிகையாக ஓய்வூதியம் வழங்கப்பட்டது – தொகை தள்ளுபடி செய்வது– தொடர்பாக.

--------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் 2006ஆம் ஆண்டிற்கான திருத்திய ஊதிய ஏற்ற முறைகளின்படி ஓய்வூதியதாரர்/குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் உயர்வு செய்து 01.01.2007 முதல் 31.05.2009 வரை உள்ள நிலுவைத் தொகை கணக்கீடு செய்து வழங்கப்பட்டதில் 1855 ஓய்வூதியதாரர்களுக்கு மிகையாக ரூ.1,10,38,228/— வழங்கப்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

இதில் 100 ஓய்வூதியதாரர்கள் / குடும்பஓய்வூதியதாரர்கள் காலமாகி விட்டதால் இவர்களுக்கு கூடுதலாக வழங்கப்பட்ட தொகை ரூ.5,60,932/—ஐ பிடித்தம் செய்ய இயலாத நிலையில் உள்ளது.

துணை இயக்குனர் மாநகராட்சி நிதி தணிக்கை அவர்களது 13.02.2012 தேதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து நபர்களுக்கு கூடுதலாக வழங்கப்பட்ட மொத்த தொகை ரூ.87,275/—ஐ ஐந்து தவணைகளில் பிப்ரவரி 2012 முதல் பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் மீதமுள்ள 1750 ஓய்வூதியதாரர்களுக்கு மிகையாக வழங்கப்பட்ட தொகை ரூ.1,03,90,021/— ஏப்ரல் 2012 மாதம் முதல் ஐந்து தவணைகளில் பிடித்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்பின் ஓய்வூதியதாரர்களின் மனுக்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் சங்க நிர்வாகிகளின் கோரிக்கை ஆகியவற்றை பரிசீலித்து மே 2012 முதல் மீதமுள்ள 4 தவணை 8 தவணைகளாக பிடித்தம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, காலமான 100 ஓய்வூதியதாரர்/குடும்பஓய்வூதியதாரர்களுக்கு மிகையாக வழங்கப்பட்ட தொகை ரூ.5,60,932/—ஐ தள்ளுபடி செய்ய அனுமதிக்கலாம் என கணக்குகள் குழு தீர்மான எண்.2 நாள்.15.06.2012—ல் தீர்மானிக்கப்பட்டுள்ளதை மாமன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்2013/2012/பி1

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 116 நாள் : 29.06.2012**

கணக்குகள் குழு தீர்மானம் எண் 2 நாள் 15.06.2012ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் 8**

பொருள் : குத்தகை – கோயம்புத்தூர் மாநகராட்சி- தெற்கு மண்டலத்திற்குட்பட்ட திருவள்ளுவர் நகர், குளத்துப்பாளையம் – கழிப்பிடங்கள் – பராமரிப்பு பணிகள் முடிக்கப்படும் வரை ஏலம் இனத்திலிருந்து நீக்கம் செய்வது – தொடர்பாக.

பார்வை : வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண்.41 நாள்.25.05.12.

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம், வார்டு எண்.87-லிலுள்ள திருவள்ளுவர் நகர் கழிப்பிடம் மற்றும் வார்டு எண்.91-லிலுள்ள குளத்துப்பாளையம் கழிப்பிடமும் கடந்த 4 முறை ஏலம் அறிவித்தும் (14.03.2012, 21.03.2012, 29.03.2012 மற்றும் 11.04.2012) எவராலும் ஏலம் கோரப்படவில்லை. மேற்படி கழிப்பிடங்கள் உதவி ஆணையர் (வருவாய்) உடன் ஆய்வு செய்த போது கட்டிடம், செப்டிக் டேங்க், பேசின் மற்றும் கதவுகள் உட்பட அனைத்தும் மிகவும் மோசமான நிலையிலும், சுகாதாரமற்ற நிலையிலும் உள்ளது. இப்பகுதியில் மிகவும் ஏழ்மையான மக்கள் குடியிருந்து வருகின்றனர். இங்கு கழிப்பிடம் தேவைப்படுகிறது.

எனவே கழிப்பிட பராமரிப்பு பணி 2 மாதங்களில் முடிக்கப்படும் என்பதால் பராமரிப்பு பணி முடிவடையும் வரை ஏலத்தை நிறுத்திவிட்டு பிறகு மறு ஏலம் கோர வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண் 41 நாள் 25.05.2012-ன் பரிந்துரையின் பேரில், மாமன்றத்தின் ஒப்புதலுக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.698/2012/B6

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 117 நாள் : 29.06.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக் குழு தீர்மானம் எண் 41 நாள் 25.05.2012ன் பரிந்துரையை ஏற்று அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 9**

பொருள் - நிர்வாகம் - கல்வி – கோயம்புத்தூர் மாநகராட்சி – மாநகராட்சி பள்ளிகளில் 12-ம் வகுப்பில் பயிலும் - மாணவ/ மாணவியர்களுக்கு அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 3 மாணவ/மாணவியர்களுக்கு, அவரவர் விரும்பும் பாடப் பிரிவுகளில் உயர்கல்விக்கு கல்லூரியில் சேரும் போது அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி கட்டணத்தினை அந்த படிப்பு முடியும் வரை அம்மாணவ, மாணவியர்களுக்காக மாநகராட்சியே செலுத்துதல் - அரசு அனுமதி கோருதல் - தொடர்பாக

-------------

மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் 12-ம் வகுப்பு பயின்று ஆண்டு இறுதித் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் முதல் 3 மாணவ/மாணவியர்களுக்கு, அவரவர் விரும்பும் பாடப் பிரிவுகளில் உயர்கல்விக்கு கல்லூரியில் சேரும் போது அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி கட்டணத்தினை அந்த படிப்பு முடியும் வரை அம்மாணவ, மாணவியர்களுக்காக மாநகராட்சியே செலுத்தும் எனவும், இதன் மூலம் 12-ம் வகுப்பில் பயிலும் மாணவ,மாணவியர்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்த ஊக்குவிக்கப்படுவர்கள் எனவும் 2012-2013-ம் நிதியாண்டு பட்ஜெட்டில் அறிவிக்கப்படுள்ளது.

மேல்நிலைப் பள்ளிகளில் 12-ம் வகுப்பு பயின்று ஆண்டு இறுதித் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் முதல் 3 மாணவ/மாணவியர்களுக்கு, அவரவர் விரும்பும் பாடப் பிரிவுகளில் உயர்கல்விக்கு கல்லூரியில் சேரும் போது அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி கட்டணத்தினை அந்த படிப்பு முடியும் வரை அம்மாணவ, மாணவியர்களுக்காக, மாநகராட்சி நிதியிலிருந்து செலுத்தவும், அதற்குரிய செலவினங்களை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து செலவிடவும், அரசு அனுமதி கோர கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவின் தீர்மான எண்.5 நாள் 24.04.2012-ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, 2012-13-ம் நிதிநிலை அறிக்கையின்படி மேல்நிலைப் பள்ளிகளில் 12-ம் வகுப்பு பயின்று ஆண்டு இறுதித் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் முதல் 3 மாணவ/மாணவியர்களுக்கு, அவரவர் விரும்பும் பாடப் பிரிவுகளில் உயர்கல்விக்கு கல்லூரியில் சேரும் போது அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி கட்டணத்தினை அந்த படிப்பு முடியும் வரை அம்மாணவ,மாணவியர்களுக்காக, மாநகராட்சி நிதியிலிருந்து செலவிடவும், அதற்குரிய செலவினங்களை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து செலவிடவும் அரசு அனுமதி பெற மாமன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- ஒப்புதல் அளிக்கலாம். எண். 4150/2012/ கே 6

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 118 நாள் : 29.06.2012</u>**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 10**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி புனரமைப்பு திட்டம் (IUDM) சாலைப் பணிகளுக்கு சிப்பம்-(1)ன்கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை : 1. மாமன்ற தீர்மான எண்.154 நாள்.30.11.2011.

2. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு(MC-II) துறை அரசாணை (MS) எண்.36 நாள்.30.03.2012
3. மாமன்றத்தின் நிர்வாக அனுமதி தீர்மான எண்.34. நாள்.27.04.2012

மேற்காண் பார்வை (3)-ல் கண்ட மாமன்ற நிர்வாக அனுமதி தீர்மானத்தின்படி கீழ்க்கண்ட சாலைகளில் தார்தளம் அமைக்க சிப்பம்-(1)க்கு கடந்த 13.06.2012ல் மின்னணுமுறை மற்றும் உறை முறைகளில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ளார்கள். அதன் விபரம் பின்வருமாறு.

**சிப்பம் எண்.1**

| வ. எண் | மண்டலம் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | மேற்கு | 13 | ஜானகி நகர், என்.ஆர்.ஜி வீதி, பட்டீஸ்வரா அப்பார்ட்மெண்ட் வீதி மற்றும் ராமலிங்கம் நகர் பகுதிகளில் மறு தார் தளம் அமைத்தல் | 33.00 |
| 2 | மேற்கு | 14 | பாரதியார் வீதி மற்றும் திலகர் வீதி பகுதிகளில் மறு தார் தளம் புதுப்பித்தல் | 17.10 |
| 3 | மேற்கு | 14 | காந்தி நகர், நல்லம்மாள் வீதி மற்றும் ராமாக்காள் வீதி பகுதிகளில் மறு தார் தளம் அமைத்தல் | 57.80 |
| 4 | மேற்கு | 14 | என்.ஜி.ஆர் வீதி மற்றும் கருப்ப கோணார் வீதி பகுதிகளில் மறு தார் தளம் அமைத்தல் | 28.60 |
| 5 | மேற்கு | 14 | பகவத் சிங் சாலை மற்றும் மசக்கோணார் வீதி பகுதிகளில் மறு தார் தளம் அமைத்தல | 25.50 |
| 6 | மேற்கு | 15 | கே.கே. காலனி, மாரியம்மன் கோவில் வீதி மற்றும் ராம்ஸ் நகர் பகுதிகளில் மறு தார் தளம் அமைத்தல் | 47.50 |
| 7 | மேற்கு | 15 | முல்லை நகர், ஸ்ரீ நகர் மற்றும் ரைட் ஹவுஸ் சாலை பகுதிகளில் மறு தார் தளம் அமைத்தல் | 53.10 |
| 8 | மேற்கு | 15 | பொன்னு சாமி நகர் மற்றும் ரங்கசாமி நகர் பகுதிகளில் மறு தார் தளம் அமைத்தல் | 45.10 |
| 9 | மேற்கு | 15 | ஜெகதீஸ் நகர் பகுதியில் மறு தார் தளம் அமைத்தல் | 42.00 |
| 10 | மேற்கு | 15 | ராதிகா அவன்யூ பகுதியில் மறு தார் தளம் அமைத்தல் | 45.10 |
| 11 | மேற்கு | 15 | பாரதி நகர், தேவி நகர் மற்றும் எல்லப்ப நாயக்கர் தோட்டம் பகுதியில் மறு தார் தளம் அமைத்தல் | 20.70 |
| 12 | மேற்கு | 15 | எம்.ஜி.ஆர். நகர், புது கிணர் வீதி, குறுக்கு வீதி மற்றும் என்.ஜி.ஆர் வீதி பகுதிகளில் மறு தார் தளம் அமைத்தல் | 21.90 |
| 13 | மேற்கு | 20 | ராஜன் காலனி மற்றும் ராஜுவ் காந்தி நகர் பகுதிகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 65.60 |
| 14 | மேற்கு | 20 | திலகர் வீதியில் மறு தார் தளம் அமைத்தல் | 21.00 |
| 15 | வடக்கு | 39 | பாரதி காலனி, ராஜகோபால் வீதி மற்றும் துரைசாமி லே அவுட் பகுதியில் மறு தார் தளம் அமைத்தல் | 46.00 |
| 16 | வடக்கு | 44 | வெங்கடேஸ்வரா நகர், மாணிக்கம் வீதி 1 மற்றும் 2, தேமைய்யன் வீதி, ஓம் சக்தி நகர் 1 மற்றும் 2, ராமசாமி நகர் 1 சாலை களுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 67.00 |
| 17 | வடக்கு | 44 | அருணா நகர், ஓம் நகர் 1 மற்றும 2 கணேஷ் நகர், மாசானியம்மன் கார்டன் மற்றும் மாமரத்தோட்டம் சாலைகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 54.00 |
| 18 | வடக்கு | 44 | லட்சுமி நகர், அன்னையப்பன் வீதி, சிவாலபுரி அம்மன் கோவில் வீதி பகுதியில் மறு தார் தளம் அமைத்தல் | 55.00 |
| 19 | வடக்கு | 44 | நல்லாம்பாளையம் பிரதான சாலைக்கு மறு தார் தளம் அமைத்தல் | 75.00 |
| 20 | வடக்கு | 46 | சங்கனூர் பிரதான சாலைக்கு தார் தளம் அமைத்தல் (ராஜ வீதி முதல் சத்தி சாலை வரை) | 68.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 21 | வடக்கு | 47 | சங்கனூர் பிரதான சாலைக்கு தார் தளம் அமைத்தல் (ரூட்ஸ் கம்பெனி முதல் ராஜ வீதி சந்திப்பு வரை) | 63.70 |
| 22 | வடக்கு | 55 | பொன்னி நகர், லட்சுமண புரம், ஜெய்சிம்மபுரம் பகுதியில் உள்ள சாலைகளுக்கு தார் தளம் அமைத்தல் | 71.85 |
| 23 | மத்தியம் | 48 | செல்லப்பன் மனைப்பிரிவில் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலை அமைத்தல் | 31.50 |
| 24 | மத்தியம் | 48 | விநாயகர் கோவில் வீதி மற்றும் மாணிக்கவாசக நகர் பகுதியில் சாலை அமைத்தல் | 43.55 |
| 25 | மத்தியம் | 48 | முத்துக்குமார் நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலை அமைத்தல் | 39.85 |
| 26 | மத்தியம் | 48 | பி.எம் சாமி பிரதான சாலை மற்றும் 1 மற்றும் குறுக்கு சாலைகள் அமைத்தல் | 37.15 |
| 27 | மத்தியம் | 48 | நடேஷகவுண்டர் லேஅவுட் மெயின் ரோடு, 1 மற்றும் II சாலை மற்றும் குறுக்கு சாலைகளை அமைத்தல் | 31.25 |
| 28 | மத்தியம் | 48 | நாச்சிமுத்து நகர், கிருஷ்ணா காலனி மற்றும் செல்வவிநாயக கார்டன் பகுதிகளில் சாலை அமைத்தல் | 33.15 |
| 29 | மத்தியம் | 48 | விஸ்வநாதபுரம் பகுதியில் தார்ச்சாலை அமைத்தல் | 37.15 |
| 30 | மத்தியம் | 53 | அலமு நகர் மற்றும் அஸ்வத் நகர் பகுதிக்கு மறு தார் தளம் அமைத்தல் | 46.50 |
| 31 | மத்தியம் | 53 | பி.கே.ஆர் நகர் பகுதிக்கு மறு தார் தளம் அமைத்தல் | 26.60 |
| 32 | மத்தியம் | 53 | பாலாஜி நகர் மற்றும் கே.கே நகர் பகுதிகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 47.50 |
| 33 | மத்தியம் | 74 | ஜி.எம் நகரில் தார் தளம் அமைத்தல் | 70.00 |
| | | | **மொத்தம்** | **1468.75** |

1. தி/ ள் ஜெ.ஆர்.ஆர். அண்ட் கே.சி.பி.ஜெ.வி.கம்பெனி, கோயம்புத்தூர்
2. தி/ ள் முரளி அன் கோ, ஊட்டி

மேற்படி இரு ஒப்பந்ததாரர்கள் சமர்ப்பித்த தொழில் நுட்ப உறைகள் திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழுவால் பரிசீலனை செய்யப்பட்டதில் தி/ள் ஜெ.ஆர்.ஆர்.அண்ட் கே.சி.பி.ஜெ.வி.கம்பெனி, கோயம்புத்தூர் அவர்கள் தொழில் நுட்ப தகுதி பெற்றுள்ளதையும், தி/ள் முரளி அன் கோ, ஊட்டி அவர்கள் தொழில் நுட்ப தகுதி பெறாததையும் ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழுவில் பரிந்துரை செய்யப்பட்டதில் ஆணையர் அவர்கள் 20-06-2012ம் தேதி உத்தரவின்படி தி/ள் ஜெ.ஆர்.ஆர்.அண்ட் கே.சி.பி.ஜெ.வி.கம்பெனி, கோயம்புத்தூர் அவர்களின் விலைப்புள்ளி 21-06-2012ம் தேதி திறக்கப்பட்டது. இதில் ஒப்பந்ததாரர் தி/ள் ஜெ.ஆர்.ஆர்.அண்ட் கே.சி.பி.ஜெ.வி.கம்பெனி, கோயம்புத்தூர் அவர்கள் மதிப்பீட்டு விலைக்கு 19.54% அதிகம் கொடுத்துள்ளார். இதனை தொடர்ந்து ஒப்பந்ததாரர் தி/ள் ஜெ.ஆர்.ஆர்.அண்ட் கே.சி.பி.ஜெ.வி. கம்பெனி, கோயம்புத்தூர் அவர்களிடம் கடிதம் மூலம் விலை குறைத்து கேட்கப்பட்டது. அதன்பேரில் ஒப்பந்ததாரர் தி/ள் ஜெ.ஆர்.ஆர்.அண்ட் கே.சி.பி.ஜெ.வி.கம்பெனி, கோயம்புத்தூர் அவர்கள் சில இனங்களுக்கு விலை குறைப்பு செய்து கொடுத்துள்ளதன் பேரில் மதிப்பீட்டிற்கு 10.17 % அதிகம் ஆகும். மேலும், மேற்படி ஒப்பந்ததாரரை மீண்டும் விலை குறைத்து கொடுக்க கடிதம் மூலம் கேட்கப்பட்டது. அதன்பேரில், மேலும் ஒப்பந்ததாரர் விலை குறைத்ததன்பேரில் மதிப்பீட்டிற்கு 4.99 % அதிகம் ஆகும்.

மேலும், 2012-2013-ம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட (Schedule of Rates-2012-2013) விலையை ஒப்பு நோக்கு செய்யும் பட்சத்தில் ஏற்படும் கூடுதல் செலவினத்தை கருத்தில் கொண்டும், இப்பணிகளுக்கான தொகை அரசு மானிய நிதியாக உள்ளதாலும், பாதாள சாக்கடை பணிகள் முடிந்துள்ளதால் பழுதடைந்த இச்சாலைகளை உடனடியாக துவங்கி முடிக்கப்பட வேண்டி உள்ளதாலும், மேற்படி பணியின் அவசியத்தை முன்னிட்டு மேற்படி பணிக்கு 4.99% மதிப்பீட்டு விலைக்கு அதிகம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் தி/ள் ஜெ.ஆர்.ஆர்.அண்ட் கே.சி.பி.ஜெ.வி. கம்பெனி, கோயம்புத்தூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், மேலும், அரசாணை எண்.G.O.Ms.No.227 நாள் **23.11.2009**–ல் (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை) தெரிவித்துள்ளவாறு மேற்படி பணிக்கு பயன்படுத்தப்படும் திரவத்தாரின் விலையானது பணி மேற்கொள்ளும் போதுள்ள சந்தை விலைக்கேற்ப வழங்கவும், அதற்காகும் கூடுதல் செலவினத்தை மாநகராட்சி பொதுநிதியில்

மேற்கொண்டு இப்பணிகளுக்கு உண்டான பட்டியல் தொகையில் வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண் 6607/2012/எம்.டி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 119 நாள் : 29.06.2012**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 11

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி புனரமைப்பு திட்டம் (IUDM) சாலைப் பணிகளுக்கு சிப்பம்-(2)ன்கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை :
1. மாமன்ற தீர்மான எண்.154 நாள்.30.11.2011.
2. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு(MC-II) துறை அரசாணை (MS) எண்.36 நாள்.30.03.2012
3. மாமன்றத்தின் நிர்வாக அனுமதி தீர்மான எண்.34. நாள்.27.04.2012

மேற்காண் பார்வை (3)-ல் கண்ட மாமன்ற நிர்வாக அனுமதி தீர்மானத்தின்படி கீழ்க்கண்ட சாலைகளில் தார்தளம் அமைக்க சிப்பம்-(2)க்கு கடந்த 13.06.2012ல் மின்னணுமுறை மற்றும் உறை முறைகளில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ளார்கள். அதன் விபரம் பின்வருமாறு.

**சிப்பம் எண்.2**

| வ. எண் | மண்டலம் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | கிழக்கு | 75 | ஸ்ரீபதி நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 74.90 |
| 2 | கிழக்கு | 75 | எஸ்.என்.வி. கார்டன் மற்றும் கற்பகம் கார்டன் சாலைகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 60.50 |
| 3 | கிழக்கு | 75 | நேதாஜி நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 68.70 |
| 4 | தெற்கு | 76 | தில்லை நகர் சாலைகளுக்கு தார் தளம் அமைத்தல் | 48.60 |
| 5 | தெற்கு | 76 | முத்துசாமி காலனி சாலைகளுக்கு தார் தளம் அமைத்தல் | 74.90 |
| 6 | தெற்கு | 76 | செல்வபுரம் வெங்கடேஸ்வரா லே அவுட், ஜி.சி வி லே அவுட் நகர், எல்.ஐ,சி காலனி 1 மற்றும் 2 சாலைகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 58.00 |
| 7 | தெற்கு | 76 | செல்வபுரம் முனியப்பா நகர், ராஜேஸ்வரி நகர் சாலைகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 59.00 |
| 8 | தெற்கு | 76 | நாராயணசாமி நகர், ரங்கப்பா லே அவுட் சாலைகளுக்கு தார் தளம் அமைத்தல் | 32.50 |
| 9 | தெற்கு | 76 | வேடபட்டி ரோடு கிழக்கு மேற்கு சாலைக்கு தார் தளம் அமைத்தல் | 19.00 |
| 10 | தெற்கு | 76 | ஆறுமுகம் உடையார் ரோடு, பாரதி நகர் குறுக்கு சாலை, மணி ரைஸ் மில் சாலைக்கு தார் தளம் அமைத்தல் | 19.25 |
| 11 | தெற்கு | 76 | பேரூர் பிரதான சாலை, ஸ்நேகா மருத்துவமனை, இ.பி டவர் லைன் ரோடு, ராஜீவ் நகர் சாலைகளுக்கு தார் தளம் அமைத்தல் | 25.00 |
| 12 | தெற்கு | 76 | தனலட்சுமி கார்டன் மற்றும் சி.பி.எம் நகர் சாலைகளுக்கு தார் தளம் அமைத்தல் | 25.00 |
| 13 | தெற்கு | 86 | ராயல் நகர், திப்பு நகர், மதினா நகர், வள்ளல் நகர் சாலைகளுக்கு தார் தளம் அமைத்தல் | 51.70 |

| | | | | |
|---|---|---|---|---|
| 14 | தெற்கு | 85 | குறிஞ்சி கார்டன், திரு நகர் சாலைகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 56.00 |
| 15 | தெற்கு | 85 | பிரபு நகர், லாலா தோட்டம் சாலைகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 54.50 |
| 16 | கிழக்கு | 75 | கொங்கு நகர், பாரதி தாசன் நகர், பழனியப்பா நகர் சாலைகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 72.00 |
| 17 | கிழக்கு | 75 | ஆர்.கே.வி நகர் டி.வி.எஸ் கார்டன் சாலைகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 67.00 |
| 18 | தெற்கு | 76 | தெலுங்குபாளையம், இந்திரா நகர், அம்மன் நகர், கோல்டன் நகர், பாரத் நகர் சாலைகளுக்கு தார் தளம் அமைத்தல் | 75.50 |
| 19 | தெற்கு | 76 | செல்வபுரம் சிதம்பரம் காலனி, நாரயணசாமி நகர், ஜெயலட்சுமி நகர், முத்தைய உடையார் வீதி, ஜோசியர் காரமடை வீதி, ஐய்யப்பா நகர், ராமச்சந்திரா நகர் மற்றும் திருவேங்கடம் நகர் பகுதிகளுக்கு தார் தளம் அமைத்தல் | 61.00 |
| 20 | தெற்கு | 77 | சண்முகா நகர் சாலைகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 50.23 |
| 21 | தெற்கு | 77 | ஸ்ரீ ராம் நகர், கருப்பண்ணன் வீதி மற்றும் பாண்டியன் நகர் சாலைகளுக்கு தார் தளம அமைத்தல் | 41.20 |
| 22 | தெற்கு | 77 | சவுடேஸ்வரி காலனி, திருவள்ளுவர் நகர், பிரைட் கார்டன், சண்முகா ராஜ புரம், நஞ்சப்பா கார்டன் சாலைகளுக்கு தார் தளம் அமைத்தல் | 52.55 |
| 23 | தெற்கு | 77 | பெரியதம்பி, அருள் கார்டன், அனுமன் அவென்யூ சாலைகளுக்கு தார் சாலை அமைத்தல் | 43.80 |
| 24 | தெற்கு | 77 | அமுல் நகர், கபூர் லே அவுட், நஞ்சப்பா லே அவுட், சேரன் நகர் சாலைகளுக்கு தார் தளம் அமைத்தல் | 58.30 |
| 25 | தெற்கு | 77 | இ.பி.காலனி மற்றும் பழனியப்பா நகர் சாலைகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 35.65 |
| 26 | தெற்கு | 77 | அன்னை இந்திரா நகர், ராஜரத்தினம் நகர், பாலாஜி நகர் சாலைகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 73.00 |
| 27 | தெற்கு | 85 | அசோக் நகர், பாலாஜி அவென்யூ சாலைகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 52.00 |
| 28 | தெற்கு | 85 | கோவிந்தசாமி லே அவுட், சாவித்திரி நகர் சாலைகளுக்கு தார் தளம் அமைத்தல் | 49.50 |
| | | | **மொத்தம்** | **1459.28** |

1. திரு.ஜெ.ராபர்ட் ராஜா, கோயம்புத்தூர்
2. தி/ ள் முரளி அன் கோ, ஊட்டி

மேற்படி இரு ஒப்பந்ததாரர்கள் சமர்ப்பித்த தொழில் நுட்ப உறைகள் திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழுவால் பரிசீலனை செய்யப்பட்டதில் திரு.ஜெ.ராபர்ட் ராஜா, கோயம்புத்தூர் அவர்கள் தொழில் நுட்ப தகுதி பெற்றுள்ளதையும், தி/ள் முரளி அன் கோ, ஊட்டி அவர்கள் தொழில் நுட்ப தகுதி பெறாததையும் ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழுவில் பரிந்துரை செய்யப்பட்டதில் ஆணையர் அவர்கள் 20-06-2012ம் தேதி உத்தரவின்படி திரு.ஜெ.ராபர்ட் ராஜா, கோயம்புத்தூர் அவர்களின் விலைப்புள்ளி 21-06-2012ம் தேதி திறக்கப்பட்டது. இதில் ஒப்பந்ததாரர் திரு.ஜெ.ராபர்ட் ராஜா, கோயம்புத்தூர் அவர்கள் மதிப்பீட்டு விலைக்கு 27.65% அதிகம் கொடுத்துள்ளார். இதனை தொடர்ந்து ஒப்பந்ததாரர் திரு.ஜெ.ராபர்ட் ராஜா, கோயம்புத்தூர் அவர்களிடம் கடிதம் மூலம் விலை குறைத்து கேட்கப்பட்டது. அதன்பேரில் ஒப்பந்ததாரர் திரு.ஜெ.ராபர்ட் ராஜா, கோயம்புத்தூர் அவர்கள் சில இனங்களுக்கு விலை குறைப்பு செய்து கொடுத்துள்ளதன் பேரில் மதிப்பீட்டிற்கு 9.73 % அதிகம் ஆகும். மேலும், மேற்படி ஒப்பந்ததாரரை மீண்டும் விலை குறைத்து கொடுக்க கடிதம் மூலம் கேட்கப்பட்டது. அதன்பேரில், மேலும் ஒப்பந்ததாரர் விலை குறைத்ததன்பேரில் மதிப்பீட்டிற்கு 4.99 % அதிகம் ஆகும்.

மேலும், 2012-2013-ம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட (Schedule of Rates-2012-2013) விலையை ஒப்பு நோக்கு செய்யும் பட்சத்தில் ஏற்படும் கூடுதல் செலவினத்தை கருத்தில் கொண்டும், இப்பணிகளுக்கான தொகை அரசு மானிய நிதியாக உள்ளதாலும், பாதாள சாக்கடை பணிகள் முடிந்துள்ளதால் பழுதடைந்த இச்சாலைகளை உடனடியாக துவங்கி முடிக்கப்பட வேண்டி உள்ளதாலும், மேற்படி பணியின் அவசியத்தை முன்னிட்டு மேற்படி பணிக்கு 4.99% மதிப்பீட்டு விலைக்கு அதிகம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.ஜெ.ராபர்ட் ராஜா, கோயம்புத்தூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், மேலும், அரசாணை எண்.G.O.Ms.No.227 நாள் **23.11.2009**–ல் (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை) தெரிவித்துள்ளவாறு மேற்படி பணிக்கு பயன்படுத்தப்படும் திரவத்தாரின் விலையானது பணி மேற்கொள்ளும் போதுள்ள சந்தை விலைக்கேற்ப வழங்கவும், அதற்காகும் கூடுதல் செலவினத்தை மாநகராட்சி பொதுநிதியில் மேற்கொண்டு இப்பணிகளுக்கு உண்டான பட்டியல் தொகையில் வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண் 6603/2012/எம்.டி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 120 நாள் : 29.06.2012**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 12**

மேற்படி இரு ஒப்பந்ததாரர்கள் சமர்ப்பித்த தொழில் நுட்ப உறைகள் திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழுவால் 19-06-2012 அன்று பரிசீலனை செய்யப்பட்டது. இதில் திரு.சி.கே.சுந்தரம், கோயம்புத்தூர் அவர்கள் தொழில் நுட்ப தகுதி பெற்றுள்ளதையும், திரு.என்.தங்கவேலு, பல்லடம் அவர்கள் தொழில் நுட்ப தகுதி பெறாததையும் ஒப்பந்தபுள்ளி திறனாய்வு குழுவில் பரிந்துரை செய்யப்பட்டதில் ஆணையர் அவர்கள் 20-06-2012ம் தேதி உத்தரவின்படி திரு.சி.கே.சுந்தரம், கோயம்புத்தூர் அவர்களின் விலைப்புள்ளி 21-06-2012ம் தேதி திறக்கப்பட்டது. இதில் ஒப்பந்ததாரர் திரு.சி.கே.சுந்தரம், கோயம்புத்தூர் அவர்கள் மதிப்பீட்டு விலைக்கு 9.27% அதிகம் கொடுத்துள்ளார். இதனை தொடர்ந்து ஒப்பந்ததாரர் திரு.சி.கே.சுந்தரம், கோயம்புத்தூர் அவர்களிடம் கடிதம் மூலம் விலை குறைத்து கேட்கப்பட்டது. அதன்பேரில் ஒப்பந்ததாரர் திரு.சி.கே.சுந்தரம், கோயம்புத்தூர் அவர்கள் சில இனங்களுக்கு விலை குறைப்பு செய்து கொடுத்துள்ளதன் பேரில் மதிப்பீட்டிற்கு 4.75 % அதிகம் ஆகும்.

மேலும், 2012-2013-ம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட (Schedule of Rates-2012-2013) விலையை ஒப்பு நோக்கு செய்யும் பட்சத்தில் ஏற்படும் கூடுதல் செலவினத்தை கருத்தில் கொண்டும், இப்பணிகளுக்கான தொகை அரசு மானிய நிதியாக உள்ளதாலும், பாதாள சாக்கடை பணிகள் முடிந்துள்ளதால் பழுதடைந்த இச்சாலைகளை உடனடியாக துவங்கி முடிக்கப்பட வேண்டி உள்ளதாலும், மேற்படி பணியின் அவசியத்தை முன்னிட்டு மேற்படி பணிக்கு 4.75% மதிப்பீட்டு விலைக்கு அதிகம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.சி.கே.சுந்தரம், கோயம்புத்தூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், மேலும், அரசாணை எண்.G.O.Ms.No.**227** நாள் **23.11.2009–**ல் (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை) தெரிவித்துள்ளவாறு மேற்படி பணிக்கு பயன்படுத்தப்படும் திரவத்தாரின் விலையானது பணி மேற்கொள்ளும் போதுள்ள சந்தை விலைக்கேற்ப வழங்கவும், அதற்காகும் கூடுதல் செலவினத்தை மாநகராட்சி பொதுநிதியில் மேற்கொண்டு இப்பணிகளுக்கு உண்டான பட்டியல் தொகையில் வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண் 6601/2012/எம்.டி.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 132 நாள் : 29.06.2012</u>**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 24

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி புனரமைப்பு திட்டம் (IUDM) சாலைப் பணிகளுக்கு சிப்பம்-(5)ன்கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை :
1. மாமன்ற தீர்மான எண்.154 நாள்.30.11.2011.
2. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு(MC-II) துறை அரசாணை (MS) எண்.36 நாள்.30.03.2012
3. மாமன்றத்தின் நிர்வாக அனுமதி தீர்மான எண்.34. நாள்.27.04.2012

மேற்காண் பார்வை (3)-ல் கண்ட மாமன்ற நிர்வாக அனுமதி தீர்மானத்தின்படி கீழ்க்கண்ட சாலைகளில் தார்தளம் அமைக்க சிப்பம்-(5)க்கு கடந்த 13.06.2012ல் மின்னணுமுறை மற்றும் உறை முறைகளில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ளார்கள். அதன் விபரம் பின்வருமாறு.

**சிப்பம் எண்.5**

| வ. எண் | மண்டலம் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | கிழக்கு | 57 | மகாலட்சுமி நகர், சிவராம் நகர், தியாகிகள் நகர் சாலைகளுக்கு தார் தளம் அமைத்தல் | 41.00 |
| 2 | கிழக்கு | 58 | குட்டி நாயுடு லே அவுட், விஜயலட்சுமி நகர் சாலைகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 43.75 |
| 3 | கிழக்கு | 61 | திருகுமரன் நகர், சிவாஸ்ரீ கார்டன், சிவா கார்டன், தயா கார்டன், சூர்யா கார்டன் சாலைகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 15.95 |
| 4 | கிழக்கு | 61 | நந்தா நகர் சாலைகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 11.70 |
| 5 | கிழக்கு | 61 | எஸ்.ஆர்.டி லே அவுட் மற்றும் எஸ்.என்.ஆர் லே அவுட் சாலைகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 13.50 |
| 6 | கிழக்கு | 61 | பாரதி நகர் சாலைகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 6.80 |
| 7 | கிழக்கு | 61 | சிந்து நகர் சாலைகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 15.50 |
| 8 | கிழக்கு | 61 | ஆணையங்காடு சாலை மற்றும் விரிவாக்க சாலைகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 23.20 |
| 9 | கிழக்கு | 61 | லட்சுமி நகர் சாலைகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 16.90 |
| 10 | கிழக்கு | 61 | ராமச்சந்திரா நகர் சாலைகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 15.50 |
| 11 | கிழக்கு | 61 | கம்பன் நகர் சாலைகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 29.50 |
| 12 | கிழக்கு | 61 | விவேகனந்தா நகர் மற்றும் டெக்ஸ்டுல் லே அவுட் சாலைகளுக்கு மறு தார் தளம் அமைத்தல் | 20.00 |
| | | | **மொத்தம்** | **253.30** |

1. திரு.எ.அம்மாசையப்பன், கோயம்புத்தூர்
2. தி/ ள் கே.சி.பி.இன்ஜினியர்ஸ் (பி) லிட், கோயம்புத்தூர்

மேற்படி இரு ஒப்பந்ததாரர்கள் சமர்ப்பித்த தொழில் நுட்ப உறைகள் திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழுவால் பரிசீலனை செய்யப்பட்டதில் திரு.எ.அம்மாசையப்பன் மற்றும் தி/ள் கே.சி.பி.இன்ஜினியர்ஸ் (பி) லிட், கோயம்புத்தூர் அவர்கள் தொழில் நுட்ப தகுதி பெற்றுள்ளதையும் ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழுவில் பரிந்துரை செய்யப்பட்டதில் ஆணையர் அவர்கள் 20-06-2012ம் தேதி உத்தரவின்படி திரு.எ.அம்மாசையப்பன் மற்றும் தி/ள் கே.சி.பி.இன்ஜினியர்ஸ் (பி) லிட், கோயம்புத்தூர் அவர்களின் விலைப்புள்ளி 21-06-2012ம் தேதி திறக்கப்பட்டது. இதில் ஒப்பந்ததாரர் திரு.எ.அம்மாசையப்பன் அவர்கள் மதிப்பீட்டு விலைக்கு 31.55% அதிகமும், தி/ள் கே.சி.பி. இன்ஜினியர்ஸ்(பி) லிட், அவர்கள் மதிப்பீட்டு விலைக்கு 15.54% அதிகமும் கொடுத்துள்ளார்கள். இதனை தொடர்ந்து ஒப்பந்ததாரர் தி/ள் கே.சி.பி.இன்ஜினியர்ஸ் (பி) லிட், கோயம்புத்தூர் அவர்களிடம் கடிதம் மூலம் விலை குறைத்து கேட்கப்பட்டது. அதன்பேரில் ஒப்பந்ததாரர் தி/ள்கே.சி.பி.இன்ஜினியர்ஸ் (பி) லிட், கோயம்புத்தூர் அவர்கள் சில இனங்களுக்கு விலை குறைப்பு செய்து கொடுத்துள்ளதன் பேரில் மதிப்பீட்டிற்கு 8.95% அதிகம் ஆகும். மேலும், மேற்படி ஒப்பந்ததாரரை மீண்டும் விலை குறைத்து கொடுக்க கடிதம் மூலம் கேட்கப்பட்டது. அதன்பேரில், மேலும் ஒப்பந்ததாரர் விலை குறைத்ததன்பேரில் மதிப்பீட்டிற்கு 4.98 % அதிகம் ஆகும்.

மேலும், 2012-2013-ம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட (Schedule of Rates-2012-2013) விலையை ஒப்பு நோக்கு செய்யும் பட்சத்தில் ஏற்படும் கூடுதல் செலவினத்தை கருத்தில் கொண்டும், இப்பணிகளுக்கான தொகை அரசு மானிய நிதியாக உள்ளதாலும், பாதாள சாக்கடை பணிகள் முடிந்துள்ளதால் பழுதடைந்த இச்சாலைகளை உடனடியாக துவங்கி முடிக்கப்பட வேண்டி உள்ளதாலும், மேற்படி பணியின் அவசியத்தை முன்னிட்டு மேற்படி பணிக்கு 4.98% மதிப்பீட்டு விலைக்கு அதிகம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் தி/ள் கே.சி.பி.இன்ஜினியர்ஸ் (பி) லிட், கோயம்புத்தூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், மேலும், அரசாணை எண்.G.O.Ms. No.227 நாள் **23.11.2009–ல்** (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை) தெரிவித்துள்ளவாறு மேற்படி பணிக்கு பயன்படுத்தப்படும் திரவத்தாரின் விலையானது பணி மேற்கொள்ளும் போதுள்ள சந்தை விலைக்கேற்ப வழங்கவும், அதற்காகும் கூடுதல் செலவினத்தை மாநகராட்சி பொதுநிதியில் மேற்கொண்டு இப்பணிகளுக்கு உண்டான பட்டியல் தொகையில் வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண் 6602/2012/எம்.டி.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 133 நாள் : 29.06.2012</u>**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 25**

பொருள் பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டது – இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்து வரும் தொகுப்பூதிய பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பி வைக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டுவது தொடர்பாக.

------

நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடித ந.க.எண்.28318/2012/மாநஅ1, நாள்.16.06.2011 ஒருங்கிணைந்த உள்ளாட்சிகளில் பணிபுரிந்து தொடர்ந்து மாநகராட்சியில் பணிபுரிய விருப்பம் தெரிவித்த தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி பணியாளர்களை மாநகராட்சி பணியில் ஈர்த்து கொள்ளவும் காலமுறை ஏற்ற ஊதிய விகிதத்தில் பணி நிரந்தரம் செய்யவும் இணைப்பில் கண்டுள்ள தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி பணியாளர்களின் பட்டியல் அரசின் செயற்குறிப்பிற்காக பரிந்துரை செய்து கருத்துரு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இணைக்கப்பட்ட பட்டியலில் கண்டுள்ளவாறு 59 பணியாளர்கள் பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் ஆணையின்படியும் மற்றும் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் ஆணையின்படியும் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் மன்ற தீர்மானங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்டு ஓராண்டு முதல் பத்து ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்து வருகின்றனர். இந்த தொகுப்பூதியப் பணியாளர்கள் ஊதியப் பட்டுவாடா பதிவேட்டில் கையொப்பமிட்டு தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி பெற்று வருகின்றனர். ஒருசில தொகுப்பூதிய பணியாளர்களுக்கு பணிப்பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. மாநகராட்சியில் செயல்படுத்தப்பட வேண்டிய பல்வேறு பணிகளுக்கு இவர்களை நியமித்துக் கொள்ளும் வகையில் மேற்குறிப்பிட்ட 59 பணியாளர்களை பணிநிரந்தரம் செய்ய அரசுக்கு கருத்துரு அனுப்ப மாமன்றத்தின் பரிந்துரைக்கும் ஒப்புதலுக்காகவும் பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : பரிசீலிக்கலாம். ந.க.எண்.5734/2011/எம்.சி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 134 நாள் : 29.06.2012</u>**

கோவை மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்து வரும் இணைக்கப்பட்ட பட்டியலில் கண்டுள்ள 59 தொகுப்பூதிய பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய அரசிற்கு பரிந்துரைத்தும், இது குறித்து கருத்துரு அனுப்ப ஒப்புதல் அளித்தும் தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 26**

பொருள் பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – ஆறு மாதங்களுக்கு மேல் காலியாக உள்ள பணியிடங்களை பூர்த்தி செய்ய அரசின் அனுமதி பெற மாமன்றத்தின் பரிந்துரைக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

-------

நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடித ந.க.எண். 28318/2012/மாநஅ1, நாள்.16.06.2012 மீது தங்கள் கனிவான கவனம் வேண்டப்படுகிறது. அரசாணை எண்.77, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் (மா.ந4) துறை நாள்.13.05.1999ன்படி கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு 4500 பணியிடங்கள் தோற்றுவித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அவ்வாறு இம்மாநகராட்சிக்கு தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களில் தற்போது 715 பணியிடங்கள் (31.05.2012 வரை) காலியாக உள்ளதால் இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்பட வேண்டிய பணிகளில் தொய்வு ஏற்படும் நிலை உள்ளது.

| வ.எண் | பதவியின் பெயர் | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | உதவி ஆணையர் (வார்டு) | 2 |
| 2. | உதவி ஆணையர் (நிர்வாகம்) | 1 |
| 3. | சட்ட அலுவலர் | 1 |
| 4. | உதவி செயற் பொறியாளர் (திட்டம்) | 4 |
| 5. | உதவி பொறியாளர்/இளம் பொறியாளர் | 7 |
| 6. | மருத்துவ அலுவலர் (அலோபதி) | 6 |
| 7. | நிருபர் | 1 |
| 8. | நேர்முக உதவியாளர் | 2 |
| 9. | சுருக்கெழுத்து தட்டச்சர் | 2 |
| 10. | இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் | 5 |
| 11. | துப்புரவு ஆய்வாளர் | 72 |
| 12. | வரிவசூலர் | 22 |
| 13. | ஓட்டுநர் | 8 |
| 14. | தலைமை அலுவலக உதவியாளர் | 1 |
| 15. | துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 6 |
| 16. | பொது சுகாதார செவிலியர்/ பகுதி சுகாதார செவிலியர் | 1 |
| 17. | சுகாதார ஆய்வாளர் | 3 |
| 18. | நகர சுகாதார செவிலியர் | 50 |
| 19. | மருந்தாளுநர் | 4 |
| 20. | ஆய்வக தொழில்நுட்ப உதவியாளர் | 1 |
| 21. | களப்பணியாளர் | 10 |
| 22. | தொழில் நுட்ப உதவியாளர் | 1 |
| 23. | தேர்ச்சி திறன் உதவியாளர் நிலை –I | 4 |
| 24. | தேர்ச்சி திறனற்ற பணியாளர் | 353 |
| 25. | பெண் செவிலிய உதவியாளர் /ஆண் செவிலிய உதவியாளர் | 23 |
| 26. | வகுப்பு –IV பணியாளர் | 9 |
| 27. | மருத்தக துப்புரவாளர் | 6 |
| 28. | துப்புரவு பணியாளர் | 110 |
| | மொத்தம் | 715 |

நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடித ந.க.எண்.19860/2012/கே3, நாள்.04.06.2012 கடித்தின்படி ஆறுமாதங்களுக்கு மேல் காலியாக உள்ள பணியிடங்களை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் அனுமதி பெற்று அப்பணியிடங்களை இரண்டு மாத காலத்திற்குள் பூர்த்தி செய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடித ந.க.எண்.28318/2012/மாநஅ1, நாள்.16.06.2011ன்படி மாநகராட்சியில் ஏற்கனவே தோற்றுவிக்கப்பட்ட நிரந்தர பணியிடங்களில் 6 மாதங்களுக்கு மேல் பூர்த்தி செய்யப்படாமல் காலியாக உள்ள பணியிடங்களை பூர்த்தி செய்து கொள்ள அரசின் அனுமதி பெற வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி பணியாளர்கள் மற்றும் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்துவரும் பணியாளர்களின் ஊதியம் மற்றும் ஓய்வூதிதாரர்களின் ஓய்வூதியம் ஆகியவை இம்மாநகராட்சியின் மொத்த வருவாயில் 34.12% மட்டுமே ஆகும். மேலும் இம்மாநகராட்சியில் அரசாணை எண்.77, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் (மா.ந4) துறை நாள்.13.05.1999ன்படி தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களில் நிர்வாக நலன் கருதி 6 மாதங்களுக்கு மேல் காலியாக உள்ள 715 பணியிடங்களை பூர்த்தி செய்து கொள்ள அரசின் அனுமதி பெற மாமன்றத்தின் பரிந்துரைக்கும் ஒப்புதலுக்கும் பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : பரிசீலிக்கலாம். ந.க.எண்.5734/2011/எம்.சி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 135 நாள் : 29.06.2012</u>**

அரசின் அனுமதி பெற ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 27

கோவை மாநகராட்சியில் 20 எண்ணிக்கையில் உள்ள மாநகராட்சி நகர் நல மையங்களில் காவலர்கள், துப்புரவு பணியாளர்கள், குழாய் பொருத்துனர், மின் கம்பியாளர் மற்றும் மேற்பார்வையாளர்கள் போன்ற பணியாளர்களை கொண்டு ஒரு வருட காலத்திற்கு தூய்மை பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் காவலர்களை நியமித்தல் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 18-06-2012 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 4866/12/ எம்.டி.3 | கோவை மாநகராட்சியில் 20 எண்ணிக்கையில் உள்ள மாநகராட்சி நகர் நல மையங்களில் காவலர்கள், துப்புரவு பணியாளர்கள், குழாய் பொருத்துனர், மின் கம்பியாளர் மற்றும் மேற்பார்வையாளர்கள் போன்ற பணியாளர்களை கொண்டு ஒரு வருட காலத்திற்கு தூய்மை பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் காவலர்களை நியமித்தல் | 74.50 | 04-06-2012 முதல் அழைப்பு | 1.தி/ள் கே.சி.பி இன்ஜினியர்ஸ் (பி) லிட், கோயம்புத்தூர் 5.00% அதிகம்<br>2.தி/ள் எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோயம்புத்தூர் 7.43% அதிகம் | தி/ள் கே.சி.பி இன்ஜினியர்ஸ் (பி) லிட், கோயம்புத்தூர் 4.85% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |

மேற்கண்ட பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண் 4866/2012/எம்.டி.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 136 நாள் : 29.06.2012</u>**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 28

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மற்றும் மத்திய மண்டலத்திலுள்ள மாநகராட்சி ஆரம்பப்பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் காவலாளிகள், துப்புரவு பணியாளர்கள், குழாய் பொருத்துனர்கள், மின்கம்பியாளர் மற்றும் மேற்பார்வையாளர்கள் போன்ற பணியாளர்களை கொண்டு ஒரு வருட காலத்திற்கு தூய்மைப் பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் காவலர்களை நியமித்தல் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 07-06-2012 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 4803/12/ எம்.டி.5 | தெற்கு மண்டலத்திலுள்ள மாநகராட்சி ஆரம்பப்பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் காவலாளிகள்,துப்புரவு பணியாளர்கள், குழாய் பொருத்துனர்கள், மின்கம்பியாளர் மற்றும் மேற்பார்வையாளர்கள் போன்ற பணியாளர்களை கொண்டு ஒரு வருட காலத்திற்கு தூய்மைப் பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் காவலர்களை நியமித்தல் (ந.க.எண்.4803/ 2012/ எம்.டி.5) | 45.66 | 23-05-2012 முதல் அழைப்பு | 1.தி/ள் கே.சி.பி இன்ஜினியர்ஸ் (பி) லிட், கோயம்புத்தூர் 4.82% அதிகம்<br>2.தி/ள் எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோயம்புத்தூர் 17.84% அதிகம் | தி/ள் கே.சி.பி இன்ஜினியர்ஸ் (பி) லிட், கோயம்புத்தூர் 4.53% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 2 | 4804/12/ எம்.டி.5 | மத்திய மண்டலத்திலுள்ள மாநகராட்சி ஆரம்பப்பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் காவலாளிகள்,துப்புரவு பணியாளர்கள், குழாய் பொருத்துனர்கள், மின்கம்பியாளர் மற்றும் மேற்பார்வையாளர்கள் போன்ற பணியாளர்களை கொண்டு ஒரு வருட காலத்திற்கு தூய்மைப் பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் காவலர்களை நியமித்தல் (ந.க.எண்.4804/ 2012/ எம்.டி.5) | 49.87 | 23-05-2012 முதல் அழைப்பு | 1.தி/ள் கே.சி.பி இன்ஜினியர்ஸ் (பி) லிட், கோயம்புத்தூர் 4.86% அதிகம்<br>2.தி/ள் எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோயம்புத்தூர் 17.98% அதிகம் | தி/ள் கே.சி.பி இன்ஜினியர்ஸ் (பி) லிட், கோயம்புத்தூர் 4.64% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |

மேற்கண்ட பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண் 4803/2012/எம்.டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 137 நாள் : 29.06.2012**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 29**

கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புர மேம்பாட்டுத்திட்டத்தின் (IUDM) கீழ் திடக்கழிவு மேலாண்மைக்காக எடுக்கப்பட்ட பல்வேறு பணிகளை ரூ.1300.00 லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் ந.க.எண். 47923/2011/E3 நாள் 01-02-2012 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் சிப்பம் 3 ன் கீழ் முதற்கட்ட குப்பை சேகரிப்பு பணிகளுக்கு தேவையான 750 எண்ணிக்கையிலான 660 லிட்டர் கொள்ளளவு கொண்ட G.I.Sheet கொள்கலன்களை கொள் முதல் செய்யும் பணிக்கு ரூ.112.50 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய பணிக்கு கடந்த 25-06-2012 ல் இரண்டு உறை முறையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் (e-tender process) கோரப்பட்டதில் (இரண்டாம் அழைப்பு) கீழ்க்கண்ட ஏழு நிறுவனங்கள் அவர்களது ஒப்பந்தப்புள்ளிகளை கொடுத்திருந்தினர்.

1) தி/ள். சுசி இன்டஸ்ட்ரிஸ், சென்னை-80
2) தி/ள். ஆர்.மதுசூதனன், சென்னை-32
3) தி/ள். என்.எஸ்.ஆர்.எல்கிமெட், சென்னை-32
4) தி/ள். ஜி.எஸ்.பாடி பில்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் காஞ்சிபுரம்-111
5) தி/ள். நில்கமல் லிமிடெட், மும்பை-93
6) தி/ள்.காம் அவிடா என்வைரோ இன்ஜீனியர்ஸ் பிரைவேட் லிமிடெட், புனே
7) தி/ள்.சின்டெக்ஸ் இன்டஸ்ட்ரிஸ் லிமிடெட், சென்னை-15.

மேலே படிக்கப்பட்ட ஏழு நிறுவனங்களின் தொழில் நுட்ப பிரேரணைகளை (Technical Bids) ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு 26-06-2012 அன்று கூடி விவாதித்ததில் வரிசை எண்கள் 1,2,4,5,6 மற்றும் 7 ஆகியவற்றில் குறிக்கப்பட்டுள்ள ஆறு நிறுவனத்தினர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் தொழில் நுட்ப ரீதியாக தகுதி பெறவில்லையெனவும், வரிசை எண் 3 ல் குறிக்கப்பட்டுள்ள நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளி மட்டுமே தொழில் நுட்ப ரீதியாக தகுதி பெற்றுள்ளதெனவும் அவர்களது விலைப்புள்ளிகள் அடங்கிய உறையினை திறக்கலாமென பரிந்துரை செய்துள்ளதை ஆணையர் அனுமதி வழங்கியுள்ளார். இதனைத் தொடர்ந்து தகுதி பெற்ற நிறுவனமான தி/ள். என்.எஸ்.ஆர்.எல்கிமெட், சென்னை-32 நிறுவனத்தின் விலைப்புள்ளிகள் அடங்கிய உறையினை 27-06-2012 அன்று திறக்கப்பட்டதில் மேற்கூறிய நிறுவனம் ரூ.171,14,250/- க்கு மதிப்பீட்டை விட 52.12 % அதிகம் கொடுத்திருந்தனர். ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு 27-06-2012 அன்று கூடி விவாதித்து அந்நிறுவனத்திடம் மதிப்பீட்டு தொகைக்கு விலை குறைப்பு செய்து கொடுக்க கேட்கலாமென பரிந்துரை செய்ததனைத் தொடர்ந்து மேற்படி நிறுவனம் அவர்களது 28-06-2012 தேதியிட்ட கடிதத்தில் அவர்களது ஒப்பந்தப்புள்ளி விலையினை ரூ.171,14,250/-லிருந்து மதிப்பீட்டுத் தொகையான ரூ.112,50,000/-க்கு விலை குறைப்பு செய்து கொடுக்க இசைவு தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு 28-06-2012 அன்று கூடி விவாதித்து மேற்கூறிய பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாலும், இம்மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள உள்ளாட்சிப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை சேவைப் பணிகள் திறன்பட செய்ய உடனடியாக கொள்கலன்களை கொள்முதல் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரினால் இதை விட குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் பெற வாய்ப்பு இருக்காதெனவும் கருத்துரை வழங்கியதுடன் தி/ள். என்.எஸ்.ஆர்.எல்கிமெட், சென்னை-32 நிறுவனத்தார் விலை குறைப்பிற்கு பின்னர் ரூ.112,50,000/- க்கு கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றத்தின் அனுமதி பெற்று ஏற்கலாமென பரிந்துரை செய்துள்ளது.

எனவே ஒருங்கிணைந்த நகர்புர மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் சிப்பம் 3 ன் கீழ் முதற்கட்ட குப்பை சேகரிப்பு பணிகளுக்கு தேவையான 750 எண்ணிக்கையிலான 660 லிட்டர் கொள்ளளவு கொண்ட G.I.Sheet கொள்கலன்களை கொள் முதல் செய்யும் பணிக்கு தி/ள். என்.எஸ்.ஆர்.எல்கிமெட், சென்னை-32 நிறுவனத்தார் விலை குறைப்பிற்கு பின்னர் ரூ.112,50,000/- க்கு கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 10682/2011/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 138 நாள் : 29.06.2012</u>**

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 30**

கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புர மேம்பாட்டுத்திட்டத்தின் (IUDM) கீழ் திடக்கழிவு மேலாண்மைக்காக எடுக்கப்பட்ட பல்வேறு பணிகளை ரூ.1300.00 லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் ந.க.எண். 47923/2011/E3 நாள் 01-02-2012 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் சிப்பம் 4 ன் கீழ் மூன்று எண்ணிக்கையிலான எக்ஸ்கவேட்டர் லோடர் மண் அள்ளும் இயந்திரங்கள் கொள் முதல் செய்யும் பணிக்கு ரூ.75.00 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.127 நகராட்சி நிர்வாகம் மற்றும் வழங்குத் துறை (மா.நா.3) நாள்:17-07-1998 ல் மேற்படி JCB போன்ற மண் அள்ளும் இயந்திரங்கள் கொள் முதல் செய்வதற்கு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளிகள் கோர வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றி சிப்பம் 4 ன் கீழ் எடுக்கப்பட்டுள்ள பணியான மூன்று எண்ணிக்கையிலான எக்ஸ்கவேட்டர் லோடர் மண் அள்ளும் இயந்திரங்கள் கொள் முதல் செய்யும் பணிக்கு கடந்த 25-06-2012 ல் இரண்டு உறை முறையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் (e-tender process) கோரப்பட்டதில் (இரண்டாம் அழைப்பு) கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்திருந்தினர்.

1) தி/ள்.LEXLS, சேலம்.
2) தி/ள்.BEML, சென்னை (A Government of India Mini Rathna Company under Ministry of Defence)

மேலே படிக்கப்பட்ட இரண்டு நிறுவனங்கள் கொடுத்திருந்த ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப பிரேரனைகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு 26-06-2012 அன்று கூடி விவாதித்து மேற்படி இரண்டு நிறுவனங்களும் தொழில் நுட்ப ரீதியாக தகுதி பெற்றுள்ளதெனவும் அவர்களது விலைப்புள்ளிகள் அடங்கிய உறைகளை திறக்கலாமென பரிந்துரை செய்துள்ளதற்கு ஆணையர் அனுமதி வழங்கியுள்ளார். இதனைத் தொடர்ந்து அவர்களது விலைப்புள்ளிகள் அடங்கிய உறை 27-06-2012 அன்று திறக்கப்பட்டதில் கீழ் கண்டவாறு விலைப்புள்ளிகள் கொடுத்துள்ளனர்.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூபாயில் | ஒப்பந்ததாரரின் விலை ரூபாயில் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | தி/ள்.LEXLS, சேலம். | 75,00,00.00 | 73,23,000.00 | மதிப்பீட்டை விட 2.36% குறைவு |
| 2. | தி/ள்.BEML, சென்னை. | 75,00,00.00 | 59,62,944.00 | மதிப்பீட்டை விட 20.49% குறைவு |

மேற்கூறிய பொருள் குறித்து ஒப்பந்தப்புள்ளி திறனாய்வு குழு 28-06-2012 அன்று கூடி விவாதித்து மேற்படி குறைவான ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ள தி/ள்.BEML, சென்னை நிறுவனத்தாரின் ரூ.59,62,944/-க்கான ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 20.49% குறைவாகவுள்ளதால் அதனை மாமன்றதின் அனுமதி பெற்று ஏற்கலாமென பரிந்துரை செய்துள்ளதற்கு ஆணையர் அனுமதி வழங்கியுள்ளார்.

எனவே ஒருங்கிணைந்த நகர்புர மேம்பாட்டுத்திட்டத்தின் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக கீழ் சிப்பம் 4 ன் கீழ் மூன்று எண்ணிக்கையிலான எக்ஸ்கவேட்டர் லோடர் மண் அள்ளும் இயந்திரங்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு தி/ள்.BEML, சென்னை நிறுவனத்தார் ரூ.59,62,944/- க்கு (மதிப்பீட்டை விட 20.49% குறைவு) கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 3394/2012/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 139 நாள் : 29.06.2012**

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது

---

**பொருள் எண் 31**

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – பகுதி II திட்டம் - 2012-13 தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையத்தில் உள்ள புதிய தங்கும் விடுதிக்கு கூடுதல் மேம்பட்ட வசதிகள் செய்வது – மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டுவது – தொடர்பாக.

பார்வை - அரசாணை MA & WS (MC-2) Dept. G.O. (D) No. 160 நாள் 07-06-2012.

*****

கோயம்புத்தூர் மாநகராட்சி – பகுதி II திட்டம் - 2012-13 சாய்பாபா காலனியில் உள்ள தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையத்தில் உள்ள புதிய தங்கும் விடுதிக்கு கூடுதல் மேம்பட்ட வசதிகள் செய்வதற்கு ரூ.75,00,000/- நிதி ஒதுக்கி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அரசாணை (D) எண் 160 நாள் 07-06-2012.

எனவே, மேற்கண்ட பணியினை பகுதி II திட்டம் - 2012-13-ல் மேற்கொள்ள ரூ.75,00,000/-க்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு -அனுமதிக்கலாம் ந.க.எண். 7042/2012/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 140 நாள் : 29.06.2012**

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 32

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி–பகுதி II திட்டம் - 2012-13 குறிச்சி, குனியமுத்தூர், கிணத்துக்கடவு குடிநீர் திட்டத்தின்கீழ் குடிநீர் வினியோகம் செய்வதற்கு புதிய டீசல் ஜெனரேட்டர் வாங்குவது – மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டுவது - தொடர்பாக.

பார்வை - அரசாணை MAWS (MC-2) Dept. G.O. (D) No. 160 நாள் 07-06-2012

*****

கோயம்புத்தூர் மாநகராட்சி–பகுதி II திட்டம் - 2012-13 குறிச்சி, குனியமுத்தூர், கிணத்துக்கடவு குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் வினியோகம் செய்வதற்கு 02 புதிய 500 KVA டீசல் ஜெனரேட்டர் வாங்குவதற்கு ரூ. 90,00,000/- நிதி ஒதுக்கி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அரசாணை (D) எண் 161 நாள் 07-06-2012.

கீழ்கண்டவாறு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது –

1. ஆத்துபொள்ளாச்சி–நீர் உந்துநிலையம் - 250 KVA டீசல் ஜெனரேட்டர்
2. ஆத்துபொள்ளாச்சி–சுத்திகரிப்பு நிலையம் - 500 KVA டீசல் ஜெனரேட்டர்
3. ஆச்சப்பட்டிநீர் உந்துநிலையம் - 250 KVA டீசல் ஜெனரேட்டர்
4. திருநகர் காலனிகுறித்சிநீர் உந்துநிலையம் - 20 KVA டீசல் ஜெனரேட்டர்

எனவே, மேற்கண்ட பணிகளை பகுதி II திட்டம் - 2012-13-ல் மேற்கொள்ள ரூ. 90,00,000/- மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு -அனுமதிக்கலாம் ந.க.எண்.10388/2011/எம்.டி.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 141 நாள் : 29.06.2012</u>**

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 33

கோவை மாநகராட்சி – பொறியியல் பிரிவில் கட்டிட கட்டுமானம், மராமத்து பணிகள் போன்றவற்றிற்கு விலை விபர அட்டவணை தயாரிக்க தமிழ்நாடு பொதுப்பணித்துறை முதன்மைப் பொறியாளர், சென்னை அவர்களின் அனுமதி எண் HDO(A)/24614/2012-1/Dated 30-04-2012-ல் அனுமதி வழங்கப்பட்ட விலை விபர அட்டவணை பெறப்பட்டுள்ளது. 2012-2013ம் ஆண்டுக்கான தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணை 01-05-2012 முதல் நடைமுறைப்படுத்தவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்று தமிழ்நாடு நெடுஞ்சாலை துறையின்மூலம் சாலைப் பணிகளுக்கும் 2012-2013-ம் ஆண்டுக்கான தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணை நெடுஞ்சாலை துறை உத்திரவு எண். 2829/TECHNICAL CELL/2012 Dated 01-06-2012-ன் படி அனுமதிக்கப்பட்ட தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணை பெறப்பட்டுள்ளது. இவ்விலை விபர அட்டவணை 01-05-2012 முதல் நடைமுறைப்படுத்தவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெறப்பட்ட 2012-2013-ம் ஆண்டுக்கான தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணையை இம்மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த பெறப்பட்ட தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணையை மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : பதிவு செய்யலாம் ந.க.எண். 7099 /2012/TA

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 142 நாள் : 29.06.2012</u>**

அலுவலகக் குறிப்பு பதிவு செய்யப்பட்டது.

---

## பொருள் எண் 34

பொருள் :- உதவித் தொகை - கோவை வடக்கு வட்டத்தில் உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் - வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்குவது - தொடர்பாக.

*******

கோவை வடக்கு வட்டத்தில் முதியோர் உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்களை கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் விசாரணை செய்து 129 பயனாளிகளை கண்டறிந்து இவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் எனவும் இவர்களுக்கு உதவித் தொகை வழங்கவும் சமூக பாதுகாப்புத் திட்டம், கோவை வடக்கு வட்டாட்சியர் அவர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட ஆட்சியரின் மக்கள் குறை தீர்க்கும் நாள் மனுவில் பெறப்பட்ட ஒரு விண்ணப்பத்தினை கோயம்புத்தூர் மாநகராட்சி சமுதாய அமைப்பாளர் மூலம் விசாரணை செய்ததில் இவர் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர் என்றும் முதியோர் உதவித்தொகை பெற தகுதியுடையவர் என கண்டறியப்பட்டுள்ளது. ஆகவே மொத்தம் 130 பயனாளிகளில் :-

| | | |
|---|---|---|
| தகுதியுடையவர்கள் | : | 127 |
| தவறான முகவரி | : | 02 |
| முகவரி குறிப்பிடப்படாதவை | : | 01 |
| மொத்தம் | : | 130 |

எனவே, சமூக பாதுகாப்பு திட்டம் கோயம்புத்தூர் (வடக்கு) வட்டாட்சியரின் பரிந்துரையினையேற்று மேற்குறிப்பிட்டுள்ள தகுதியுடைய மொத்தம் 127 பயனாளிகளுக்கு வறுமைக்கோட்டின் கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம். எண். 1748/2012/எம்.இ. 6.

**மாநகர மன்ற தீர்மானம் எண் : 143 நாள் : 29.06.2012**

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 35

பொருள்- கலை பண்பாட்டுத்துறை – கோயம்புத்தூர் தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரிக்கு சொந்தமாக கட்டடம் கட்டுதல் - சட்டமன்ற உறுதி மொழி எண்.110/2006 – 2011-2012 ஆம் ஆண்டு சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறையின் மானியக் கோரிக்கை எண்.29 மீதான அறிவிப்பு - இடம் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை- முதன்மைச் செயலர்/ஆணையர், கலை பண்பாட்டு இயக்ககம், சென்னை அவர்களின் நேர்முக கடிதம் எண்.6002/ ஊ1 /2006 நாள்.20.06.2012.

--------------

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண்.24, ஆரோக்கியசாமி சாலை, வார்டு எண். எச்(8), பிளாக் எண்.18, ந.அ.எண்.646 மற்றும் 650-ல் 15.25 ஏக்கர் பரப்பளவில் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, குடியிருப்பு கட்டிடம், காதுகேளாதோர் பள்ளி, மகளிர் சங்க கட்டிடம், மாநகராட்சி வணிக வளாகம், ஆதரவு அற்றோர் தங்கும் விடுதி, சத்துணவு கட்டிடம் மற்றும் மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் இசைக்கல்லூரி இயங்கி வருகிறது. தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிக்கு சொந்த கட்டிடம் கட்ட கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்துடன் கூடிய காலி இடத்தை ஒதுக்கீடு செய்து தர கலைபண்பாட்டு இயக்க முதன்மை செயலர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க மாமன்றத்தால் அரசின் அனுமதி பெற்று வழங்க தீர்மானம் எண்.205 நாள்.29.12.2011-ல் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இக்கல்லூரிக்கு சொந்த கட்டிடம் கட்ட ரூ.1.00 கோடி (ரூபாய் ஒரு கோடி மட்டும்) வழங்கி அரசு ஆணை எண்.61 நாள்.26.03.2012-ல் சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை நாள்.26.03.2012-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் நிலத்திற்கான சந்தை மதிப்பு பெற்றுக் கொண்டு கலை பண்பாட்டு துறைக்கு வழங்க அரசு உத்திரவு வேண்டி பிரேரனை 25.4.2012-ல் அனுப்பப்பட்டுள்ளது. தற்போது மேற்படி இடத்தில் கட்டிடம் கட்ட முன்நுழைவு அனுமதி கேட்டு துறையின் ஆணையர் அவர்களின் கடிதம் பெறப்பட்டுள்ளது. அவசர அவசியத்தினை கருதி முன்நுழைவு அனுமதி வழங்க அரசுக்கு பரிந்துரை செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- அனுமதிக்கலாம் ந.க.எண்.10767/2011/எம்.எச்.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 144 நாள் : 29.06.2012</u>**

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது

---

## பொருள் எண் 36

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகளில் பட்டியலில் உள்ள பணிகள் முடிவுற்றது மற்றும் சில பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. பாதாளசாக்கடை திட்ட பணிகள் முடிந்த இடங்களில் உள்ள சாலைகளை சரிசெய்ய அரசுமானியமாக ரூ.15.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையை அரசிடமிருந்து பெறுவதற்கு திட்டப் பிரேரணை அனுப்பக் கோரியுள்ளனா். எனவே கீழ்க்கண்ட இணைப்பிலுள்ள வேலை முடிக்கப்பட்ட 77.070 கி.மீ நீளமுள்ள 295 சாலைப் பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்து சாலைகளை சீரமைத்து தாா் தளம் அமைக்கும் பணிகளை ரூ,26.95 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நிா்வாக அனுமதி வழங்க அரசுக்கு அனுப்பி வைக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் :8230/2010/MD3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் : 145 நாள் : 29.06.2012</u>**

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி வழங்கி தீர்மானிக்கப்பட்டது

---

**(ஒப்பம்) செ.ம. வேலுசாமி**
**மேயர்**
கோயம்புத்தூர் மாநகராட்சி

## கோயம்புத்தூர் மாநகராட்சி
## இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் தொகுப்பூதியம் மற்றும் தினக்கூலி பணியாளர்களின் பெயர்பட்டியல்

| வ. எண். | பேரூராட்சி / ஊராட்சி பெயர் | பணியாளர் பெயர் | பதவி | பணியில் சேர்ந்த நாள் | மே 2012ல் பெற்ற தொகுப்பூதியம் | மாநகராட்சியில் ஈர்த்து கொள்ள வேண்டிய பணியிடம் |
|---|---|---|---|---|---|---|
| | தொகுப்பூதியத்தில் பணிபுரிபவர்கள் | | | | | |
| 1. | சரவணம்பட்டி | என். சுப்பிரமணியன் | குடிநீர் விநியோக பணியாளர் | 12.08.1997 | ரூ.1155/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் |
| 2. | சரவணம்பட்டி | கிருஷ்ணப்பன் | குடிநீர் விநியோக பணியாளர் | 12.08.1997 | ரூ.1155/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் |
| 3. | சரவணம்பட்டி | ஆர். பழனிசாமி | குடிநீர் விநியோக பணியாளர் | 12.08.1997 | ரூ.1155/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் |
| 4. | சரவணம்பட்டி | கே. ராஜேந்திரன் | குடிநீர் விநியோக பணியாளர் | 12.08.1997 | ரூ.1155/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் |
| 5. | சரவணம்பட்டி | எஸ். தர்மராஜ் | குடிநீர் விநியோக பணியாளர் | 12.08.1997 | ரூ.1155/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் |
| 6. | துடியலூர் | பி. கண்ணம்மாள் | குடிநீர் விநியோக பணியாளர் | 26.12.2000 | ரூ.1020/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் |
| 7. | துடியலூர் | கே. தங்கராஜ் | குடிநீர் விநியோக பணியாளர் | 26.12.2000 | ரூ.1020/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் |
| 8. | துடியலூர் | ஆர். பழனிசாமி | குடிநீர் விநியோக பணியாளர் | 26.12.2000 | ரூ.1020/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் |
| 9. | துடியலூர் | இஸ்மாயில் | குடிநீர் விநியோக பணியாளர் | 26.12.2000 | ரூ.1020/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் (30.05.2012ல் காலமாகி விட்டார்) |
| 10. | துடியலூர் | பி. முருகன் | குடிநீர் விநியோக பணியாளர் | 26.12.2000 | ரூ.1020/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் |
| 11. | துடியலூர் | பி. கோபால் | குடிநீர் விநியோக பணியாளர் | 26.12.2000 | ரூ.1020/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் |
| 12. | துடியலூர் | செல்வன் | குடிநீர் விநியோக பணியாளர் | 26.12.2000 | ரூ.1000/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் |
| 13. | சின்னவேடம்பட்டி | கண்ணம்மாள் | கழிப்பிடம் துலக்குபவர் | செப்டம்பர் 2000 முதல் பணிபுரிந்து வருகிறார். | ரூ.1430/– | துப்புரவு பணியாளர் |
| 14. | சின்னவேடம்பட்டி | செண்டு | கழிப்பிடம் துலக்குபவர் | செப்டம்பர் 2000 முதல் பணிபுரிந்து வருகிறார். | ரூ.1430/– | துப்புரவு பணியாளர் |
| 15. | சின்னவேடம்பட்டி | தனலட்சுமி | கழிப்பிடம் துலக்குபவர் | செப்டம்பர் 2000 முதல் பணிபுரிந்து வருகிறார். | ரூ.1810/– | துப்புரவு பணியாளர் |
| 16. | சின்னவேடம்பட்டி | சுப்பையன் | குடிநீர் விநியோக பணியாளர் | செப்டம்பர் 2000 முதல் பணிபுரிந்து வருகிறார். | ரூ.1500/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் |
| 17. | சின்னவேடம்பட்டி | முருகன் | திடக்கழிவு மேலாண்மை துப்புரவு பணியாளர் | செப்டம்பர் 2006 முதல் பணிபுரிந்து 24.02.2012ல் காலமாகி விட்டார். | ரூ. 500/– மே 2011ல் பெற்ற ஊதியம். | துப்புரவு பணியாளர் |
| 18. | வெள்ளக்கிணறு | சி. கோவிந்தராஜ் | குடிநீர் விநியோக பணியாளர் | 05.03.1993 | ரூ.400/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் |
| 19. | வெள்ளக்கிணறு | என். வரதன் | கழிப்பிடம் துலக்குபவர் | 01.10.2005 | ரூ.900/– | துப்புரவு பணியாளர் |
| 20. | வெள்ளக்கிணறு | வி. அங்காத்தாள் | கழிப்பிடம் துலக்குபவர் | 01.09.2005 | ரூ.900/– | துப்புரவு பணியாளர் |

| வ. எண். | பேரூராட்சி / ஊராட்சி பெயர் | பணியாளர் பெயர் | பதவி | பணியில்சேர்ந்த நாள் | மே 2012ல் பெற்ற தொகுப்பூதியம் | மாநகராட்சியில் ஈர்த்து கொள்ள வேண்டிய பணியிடம் |
|---|---|---|---|---|---|---|
| 21. | வெள்ளக்கிணறு | சி.செல்லம்மாள் | கழிப்பிடம் துலக்குபவர் | 01.08.2000 | ரூ.300/– | துப்புரவு பணியாளர் |
| 22. | வடவள்ளி | சி. ஆறுச்சாமி | குடிநீர் விநியோக பணியாளர் | 05.01.2001 | ரூ.1610/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் |
| 23. | வடவள்ளி | ப. பழனிச்சாமி | குடிநீர் விநியோக பணியாளர் | 05.01.2001 | ரூ.2210/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் |
| 24. | வடவள்ளி | ஆ. துரைசாமி | குடிநீர் விநியோக பணியாளர் | 05.01.2001 | ரூ.2210/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் |
| 25. | வடவள்ளி | மு. கந்தசாமி | குடிநீர் விநியோக பணியாளர் | 05.01.2001 | ரூ.2210/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் |
| 26. | வடவள்ளி | கு. நடராஜன் | குடிநீர் விநியோக பணியாளர் | 05.01.2001 | ரூ.2210/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் |
| 27. | வடவள்ளி | கி. ரங்கராஜ் | குடிநீர் விநியோக பணியாளர் | 05.01.2001 | ரூ.1610/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் |
| 28. | வடவள்ளி | எம்.மருதன் | குடிநீர் விநியோக பணியாளர் | 05.01.2001 | ரூ.1610/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் (30.04.2012ல்பணிஓய்வு பெற்று விட்டார்) |
| 29. | வடவள்ளி | ப. சுப்பிரமணியன் | குடிநீர் விநியோக பணியாளர் | 05.01.2001 | ரூ.1610/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் |
| 30. | வடவள்ளி | கே.எம். துரைசாமி | குடிநீர் விநியோக பணியாளர் | 05.01.2001 | ரூ.1610/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் |
| 31. | வடவள்ளி | சி. ஆறுச்சாமி | குடிநீர் விநியோக பணியாளர் | 05.01.2001 | ரூ.2210/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் |
| 32. | வடவள்ளி | ர. பாப்பண்ணன் | குடிநீர் விநியோக பணியாளர் | 05.01.2001 | ரூ.1610/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் (30.04.2012ல்பணி ஓய்வு) |
| 33. | வடவள்ளி | மு. நஞ்சன் | குடிநீர் விநியோக பணியாளர் | 05.01.2001 | ரூ.1610/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் |
| 34. | வடவள்ளி | ப. ஆறுமுகம் | குடிநீர் விநியோக பணியாளர் | 05.01.2001 | ரூ.1610/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் |
| 35. | வடவள்ளி | ர. மருதப்பன் | குடிநீர் விநியோக பணியாளர் | 05.01.2001 | ரூ.1610/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் |
| 36. | வடவள்ளி | ம. சின்னசாமி | குடிநீர் விநியோக பணியாளர் | 05.01.2001 | ரூ.1610/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் |
| 37. | வீரகேரளம் | தண்டபாணி | குடிநீர் விநியோக பணியாளர் | 01.03.1984 | ரூ.2525/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் |
| 38. | வீரகேரளம் | கேசவன் | குடிநீர் விநியோக பணியாளர் | 01.03.1984 | ரூ.1370/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் |
| 39. | வீரகேரளம் | ரங்கசாமி | குடிநீர் விநியோக பணியாளர் | 01.03.1984 | ரூ.1370/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் |
| 40. | வீரகேரளம் | பரமேஸ்வரன் | குடிநீர் விநியோக பணியாளர் | 02.01.2001 | ரூ.1370/– | தேர்ச்சி திறனற்ற பணியாளர் |
| 41. | விளாங்குறிச்சி | ஜெகநாதன் | சுகாதார பணியாளர் | 10.03.1999 | ரூ.2000/– | துப்புரவு பணியாளர் |
| 42. | விளாங்குறிச்சி | செந்தில் | சுகாதார பணியாளர் | 14.09.2000 | ரூ.2000/– | துப்புரவு பணியாளர் (13.06.2012ல் பணி நீக்கம் செய்யப்படுள்ளார்) |
| 43. | விளாங்குறிச்சி | ராஜன் | சுகாதார பணியாளர் | 17.10.1990 | ரூ.2000/– | துப்புரவு பணியாளர் |
| 44. | விளாங்குறிச்சி | சரவணச் செல்வன் | சுகாதார பணியாளர் | 20.01.1990 | ரூ.2000/– | துப்புரவு பணியாளர் |
| 45. | விளாங்குறிச்சி | சுந்தர்ராஜன் | சுகாதார பணியாளர் | 16.03.1994 | ரூ.2000/– | துப்புரவு பணியாளர் |
| 46. | விளாங்குறிச்சி | பொன்னுசாமி | சுகாதார பணியாளர் | 16.03.1999 | ரூ.2000/– | துப்புரவு பணியாளர் |
| 47. | விளாங்குறிச்சி | ரவிச்சந்திரன் | சுகாதார பணியாளர் | 01.03.1991 | ரூ.2000/– | துப்புரவு பணியாளர் |

| வ. எண். | பேரூராட்சி/ ஊராட்சி பெயர் | பணியாளர் பெயர் | பதவி | பணியில்சேர்ந்த நாள். | மே 2012ல் பெற்ற தினக்கூலி ஊதியம் | மாநகராட்சியில் ஈர்த்து கொள்ள வேண்டிய பணியிடம் |
|---|---|---|---|---|---|---|
| | தினக்கூலி பணியாளர்கள் | | | | | |
| 48. | சரவணம்பட்டி | கே. தேன்மொழி | கணினி பணி | 24.08.2010 | நாள் ஒன்றுக்கு ரூ.250/– வீதம் வழங்கப்படுகிறது | கணினி விவர குறிப்பாளர் |
| 49. | துடியலூர் | மா.பாலசுப்பிரமணியம் | கணினி பணி | 26.12.2006 | நாள் ஒன்றுக்கு ரூ.250/– வீதம் வழங்கப்படுகிறது | கணினி விவர குறிப்பாளர் |
| 50. | துடியலூர் | பி. மனோகரன் | ஓட்டுநர் | 12.02.2010 | நாள் ஒன்றுக்கு ரூ.230/– வீதம் வழங்கப்படுகிறது. | ஓட்டுநர் |
| 51. | சின்னவேடம்பட்டி | ஆர். சீத்தாலட்சுமி | கணினி பணி | 25.11.2005 | நாள் ஒன்றுக்கு ரூ.250/– வீதம் வழங்கப்படுகிறது. | கணினி விவர குறிப்பாளர் |
| 52. | வெள்ளகிணறு | வெ. மாசிலாமணி | கணினி பணி | 27.05.2011 | நாள் ஒன்றுக்கு ரூ.250/– வீதம் வழங்கப்படுகிறது | கணினி விவர குறிப்பாளர் |
| 53. | வெள்ளகிணறு | ஆர். சோமசுந்தரம் | ஓட்டுநர் | 30.12.2010 | நாள் ஒன்றுக்கு ரூ.205/– வீதம் வழங்கப்படுகிறது | ஓட்டுநர் |
| 54. | வடவள்ளி | ஆர். ராதாமணி | NMR | 14.12.2004 | நாள் ஒன்றுக்கு ரூ.250/– வீதம் வழங்கப்படுகிறது | கணினி விவர குறிப்பாளர் |
| 55. | வீரகேரளம் | பர்வீன்பானு | NMR | 15.02.2008 | நாள் ஒன்றுக்கு ரூ.250/– வீதம் வழங்கப்படுகிறது. | கணினி விவர குறிப்பாளர் |
| 56. | வீரகேரளம் | அ. சக்திவேல் | ஓட்டுநர் | 11.02.2005 | நாள் ஒன்றுக்கு ரூ.245/– வீதம் வழங்கப்படுகிறது. | ஓட்டுநர் |
| 57. | வீரகேரளம் | கே. முருகன் | ஓட்டுநர் | 16.05.2011 | நாள் ஒன்றுக்கு ரூ.225/– வீதம் வழங்கப்படுகிறது. | ஓட்டுநர் |
| 58. | காளப்பட்டி | சு. சின்னராஜ் | ஓட்டுநர் | 15.04.2008 | நாள் ஒன்றுக்கு ரூ.245/– வீதம் வழங்கப்படுகிறது. | ஓட்டுநர் |
| 59. | காளபட்டி | பா.ராதிகா | கணினி பணி | 05.08.2008 | நாள் ஒன்றுக்கு ரூ.250/– வீதம் வழங்கப்படுகிறது. | கணினி விவர குறிப்பாளர் |

**ஆணையாளர்,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி.**